ISSN 1703-9185

# ஆத்மஜோதி

## Arthmajothy

January-March 2008
சர்வசித்து தை-பங்குனி 2008
இலவச வெளியீடு
3000 பிரதிகள்



முன்னாள்
இந்து கலாச்சார அமைச்சர்(இலங்கை)
**மாண்புமிகு தியாகராஜா மகேஸ்வரன்**

புதிய இடத்தில்

# VANI KKIRUBAA INC.

## Custom Framing Book Depot

இங்கு வீடு குடிபுகுதலுக்கான படங்கள், மற்றும் சுவாமிப் படங்கள், அத்துடன் உங்கள் Photo, திருமணவாழ்த்து மடல்கள் போன்ற பலதரப்பட்ட படங்கள் உங்கள் விருப்பங்களுக்கேற்ற வகையில் Fram செய்து கொடுக்கப்படும்.

அத்துடன் இங்கே, இலங்கை, இந்திய பத்திரிகைகள், சஞ்சிகைகள், நாவல்கள், கனேடிய பாடத் திட்டத்திற்கு அமைவான ஆங்கிலப் பாடப் புத்தகங்களும் உண்டு.

**Kiruba or Siva: 416-265-3605**

294 MARKHAM ROAD, SCARBOROUGH
(Markham & Eglinton)



உங்கள் சகல காப்புறுதித் தேவைகளையும் பூர்த்தி செய்ய ஓர் நம்பிக்கையான நிறுவனம்

ஆயுள்காப்புறுதி உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் ஓர் பாதுகாப்பு

**பணத்தை மீளப்பெறக்கூடிய புதிய ஆயுட்காப்புறுதித் திட்டம்**


* நிரந்தர ஆயுட்காப்புறுதி
* வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி
* கொடிய நோய்களுக்கான காப்புறுதி
* ஈட்டுக்கடன் காப்புறுதி
* பதிவு செய்யப்பட்ட சிறுவர் சேமிப்புத் திட்டம்

ஸ்ரீதரன் துரைராஜா

**SRITHARAN THURAIRAJAH**



**416-918-9771**



மலர் 7: இதழ் 3
சர்வசித்து வருடம்
தை - பங்குனி
திருவள்ளுவர்
ஆண்டு
*2038*

**கௌரவ ஆசிரியர்கள்**
பேரறிஞர்
முருகவே பரமநாதன்
டாக்டர் இ. இலம்போதரன்

**பிரதம ஆசிரியர்**
திரு. வி. கந்தவனம்

**ஆசிரியர் குழு**
திரு. செ. சோமசுந்தரம்
திரு. சிவ. முத்துலிங்கம்

**எழுத்தமைப்பு**
திரு. மா. கனகசபாபதி

**அச்சுப் பதிப்பு**
விவேகா அச்சகம்

**வெளியீடு**
ஆத்மஜோதி
தியான நிலையம்
பதிவு இல: 1476651

**தொடர்பு முகவரி**
Siva Muthulingam
217 Morningside Ave.
Apt. 912
Toronto, ON. M1E 3E4
Tel: (416) 724-6240
www.arthmajothy.org

உ
சிவமயம்

# ஆத்மஜோதி

*தாபிதம்: 1948*

ARTHMA JOTHY
Est. 1948
ISSN 1703-9185

## உள்ளடக்கம்

1. ஆசிரியர் தலையங்கம்
2. எங்குமுள்ள பிள்ளையார்
3. செல்வச் சந்நிதியா்ன் காட்டிய பாதையில் ...
4. பற்று
5. சைவசித்தாந்தம்
6. காயத்திரி மந்திரத்தின்....
7. தில்லைப் பெருங்கோயில் தேவார விவகாரம்
8. சிவனொளிபாத மலை
9. திருமுறை மாநாடு
10. இந்து சமயப் பேரவைச் செய்திகள்
11. 2010 லிருந்து 2160 வரை
12. சிதம்பரத்தில் இந்து சமயப் பேரவை
13. ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

ஆசிரியர் தலையங்கம்

# சைவமும் தமிழும் தன்விழியான்

காரை நகரின் கதிமகனை
    கன்னித் தமிழர் மதிமகனை
பாரம் பரமன் பணியென்றே
    பற்பல தொண்டுகள் செய்தவனை
தூர நோக்குத் தொழில்வேந்தை
    துணிச்சற் பேச்சில் வல்லவனை
ஈர மனத்தால் இறைவனடி
    இறைஞ்சும் பொழுதிற் சுட்டனரோ?

பங்கம் இல்லாத் தமிழர்களைப்
    பயங்கர வாதிகள் எனச்சொல்லும்
வங்க அரசியற் சிங்களவர்
    வலையில் மகேசுவரன் வீழ்ந்தனரோ
தங்கள் ஒட்டுப் படைகள்செயல்
    சந்திக்கு வரமுன் சதிசெய்து
சிங்க மகனின் உயிரெடுத்தார்
    சிங்களப் பயங்கர வாதமிதே!

தமிழர் வரலா றறியாதார்
    தணியாத் தாகம் புரியாதார்
தமிழர் வீரம் சதிகளினால்
    சாயா தென்பதை உணராதார்
அமைதிப் புத்த பிரான்சொன்ன
    அறத்தை அறவே விளங்காதார்
சமயம் வளர்த்த அன்புநெறிச்
    சந்தணச் சைவரைத் தறித்துவிட்டார்!

வேலி பயிரை மேய்ந்ததுவோ
    விளக்கு வீட்டை எரித்ததுவோ

---

*உலகப் பற்றுள்ளவனுக்கு கடவுள் பக்தி கசக்கும்.*

கோல இலங்கைப் பொன்மகளும்
    குரங்குக் கையின் மாலையதோ
கேலி யாகும் அரசியலோ
    கீழ்மைக் குணத்தின் பரிசுகளோ
போலி முகத்தைக் கிழித்தெறியப்
    போர்முகங் கொள்ளும் புலிப்படையே!

கன்னன் எங்கள் மகேசுவரன்
    கண்ணிகர் மக்கள் பாசமகன்
முன்னாள் அமைச்சர் மும்மொழியான்
    முயற்சி உடையான் இகழ்ச்சியிலான்
தன்னே ரில்லான் நல்வழியான்
    சைவமும் தமிழும் தன்விழியான்
எந்நா ளும்நம் இதயங்கள்
    இருப்பான் இவன்புகழ் வாழியவே!


- வி. கந்தவனம்


# P. KAYILASANATHAN

**B.A.(Cey.) LL.B(Cey)**

Barrister & Solicitor

**உங்கள் தேவைகளுக்கு குறிப்பாக......**



குற்றவியல் வழக்குகள்
குடிவரவு, அகதிநிலை விண்ணப்ப விசாரணைகள்
மேன்முறையீடுகள்
மனிதாபிமான அடிப்படை விண்ணப்பம்
ஸ்பொன்சர் சம்பந்தமான சகல விடயங்களும்
வீடு, வியாபார ஸ்தாபனங்கள் வாங்குதல் விற்றல்
குடும்ப விவகாரம்
வாணிபச் சட்டங்கள் சம்பந்தமான சகல விடயங்கள்

**2401 Eglinton Ave. East, Suite 302**
**Scarborough, ON. M1K 2M5**
**Tel: 416-752-9561**
**Fax: 416-752-7262**

# எங்குமுள்ள பிள்ளையார்

**நீர்வேலி**
**அரசகேசரிப் பிள்ளையார்**

கலகஞ்செய் கயமுகனைக் கடிந்த கொம்பர்
காலத்தைக் கோலத்தைக் கடந்த வம்பர்
அலகில்செந் தமிழ்முனிக்கும் அவ்வை யார்க்கும்
ஆர்வுடனே அருள்புரிந்த அரிய நம்பர்
உலகெல்லாம் தொழுதேத்தும் ஓம்மு கத்தார்
ஒழுக்கத்தில் உயர்ந்தநீர் வேலி யுள்ளார்
அலமரலும் அடியவருக் கருள வல்லார்
அவரரச கேசரிப் பிள்ளை யாரே.

**சிறுப்பிட்டி**
**செல்லப் பிள்ளையார்.**

அஞ்சாத ஆணவத்தை அடக்க வல்லார்
அஞ்சுபவர்க் கருள்பாலித் தணைக்க வல்லார்
நெஞ்சார நீங்காது நினைக்கும் அன்பர்
நெஞ்சத்தில் நிறைந்தென்றும் நிலைக்கும் நண்பர்
துஞ்சாத ஊக்கமொடு துணிவுள் ளாரும்
சொற்றிறம் பாதவரும் துரங்கச் செய்யும்
செஞ்சேதலைச் சிறுப்பிட்டி திகழுந் தேவர்
செல்லப்பிள் ளைகழல்கள் சேர்ந்துய் வாமே.

**அல்வாய்**
**மாலைச்சந்தைப் பிள்ளையார்**

முதலாகி முடிவாகி முடியா தாகி
மூன்றாகி நான்காகி ஐந்து மாகி
விதியாகி வித்தாகி விளைவு மாகி
வினைதீர்த்து வீடேற்றும் பதியு மாகி

---

*ஆசையுள்ள வாழ்வில் இன்பம் இருப்பதில்லை.*

அதிசைவப் பதியாய அல்வாய் மாலைச்
சந்தைவளர் பிள்ளையருக் கன்ப ராகி
மதிவேண்டிக் கல்விகலை வளங்கள் வேண்டி
மனைவேண்டி மனம்வேண்டி வணங்கு வாமே.

**அல்வாய்**
**புதுக்குளக்கரைப் பிள்ளையார்**

செல்வாய செல்வத்தைத் தருவாய் போற்றி
தேடமுன் னோடிவந் தருள்வாய் போற்றி
பொல்லாத வினையாவும் அறுப்பாய் போற்றி
புரியாது விட்டபிழை பொறுப்பாய் போற்றி
பல்லோரும் போற்றுகலை வல்லார் வாழும்
பத்திநெறி வளர்கின்ற பண்பு மிக்க
அல்வாயின் புதுக்குளத்துக் கரையின் ஆதி
ஆனைமுகப் பெருமானே போற்றி போற்றி.

- வி. கந்தவனம்


இந்து சமயப் பேரவை நடத்தும்

**திருமுறை மாநாடு 2008**

**August 09, 2008** சனிக்கிழமை
அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயம்

**August 10, 2008** ஞாயிற்றுக்கிழமை
கனடா கந்தசுவாமி கோவில்

**August 17, 2008** ஞாயிற்றுக்கிழமை
மொன்றியல் ஆத்ம ஜோதி
கல்வி நிலையம்

தொடர்புகளுக்கு: **416-724-6240, 905-944-9021**


*ஆசையில்லா வாழ்வில் துன்பம் இருப்பதில்லை.*

## செல்வச் சந்நிதியான் காட்டிய பாதையில் நான் சந்தித்த மறைஞானச் சிற்பிகள்

பேரறிஞர் முருகவே பரமநாதன்

இலக்கியங்களிலே, ஏன் பாரகாவியங்களிலே பால் மணக்கும், நெய்மணக்கும், புகழ் மணக்கும், தெய்வீகம் மணக்கும், ஞானம் மணக்கும் என்றெல்லாம் வருவதை நாம் படித்து மகிழ்கிறோம். சோறு மணக்கும் பூமியிலே பசி மணக்கமாட்டாதென்ற உண்மை தானே வெளிப்படையன்றோ. தமிழக ஆதீனங்களிலே தமிழ் மணக்கும், புராணங்கள் மணக்கும், சைவசின்னங்கள் மணக்கும், திருமுறை மணக்கும். சைவசித்தாந்தமும் மணக்கும் என அறிகிறோம். இப்படிப் பார்த்தால் செல்வச் சந்நிதியிலோ சோறு மணக்கும். எங்கும் மடங்கள், எங்கும் அன்னதானம். இதனாலே இறைமகனை அன்னக் கந்தனென ஆராமையோடு பேசுவர். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே. பசிப்பிணியை மட்டும் நீக்கவில்லை நிர்மலன். உடற்பிணியையும், உயிர்ப்பிணியையும் தீர்க்கிறான். தீராதநோய், தீர்த்தருள வல்லான் தன்னை எனப் பாவேந்தரான, நாவேந்தர் பாடியுள்ளார்.

இந்த ஆரோக்கியமான சூழ்நிலை நிறைந்த, சந்நிதி-செல்வச்சந்நிதியாயிற்று. அவன் கழலடியைத் தொழும் செல்வமே செல்வமன்றோ. இச்செல்வம் என்றும் அழியா இன்பமும், அமைதியும், ஆனந்தமும், நிம்மதியும் தருவது. மற்ற எந்த இன்பமும் இதற்கு ஈடாகாது.

பேரானந்தப் பெருவாழ்வைப் பெறவும், உடற்பிணியை நீக்கவும், உயிர்ப்பொறைக்கு நிறைவான வாழ்வு காணவும், பக்தர்கள், செல்வச்சந்நிதி வேலழகனை, மால்மருகனைத் தேடி ஓடுகின்றனர். அந்த ஆற்றங்கரை அண்ணலின் பெருமை இவற்றோடு நின்று விடவில்லை. காலகாலமாக மறைஞானச் செல்வர்கள், முப்பெருமை வாய்ந்த இத்தலத்திலே ஆன்மீக நெறியையும் பரப்பி வருகிறார்கள். என் குருதேவர் திருவாசகப் பேரூற்று ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகள் சிலரை நேரில் அறிமுகம் செய்தார்கள். ஒருவர் கடவுள் சுவாமியென்று அழைக்கப்படும் முருகுப்பிள்ளைச் சுவாமிகள், மற்றவர் ஆனந்தா ஆச்சிரமம் மயில்வாகனம் சுவாமிகள். இவர்களுடன் முருகேசுச் சுவாமிகள் எம் இல்லம் வந்து

அறிமுகமானார். இம்மூவரும் முருகனது திருநாமம் தாங்கியவர்களே. எவ்வளவு பொருத்தமானது. பழவடியார் பெருமையை நாம் திருவாசகத்திலே பரக்கக் காணலாம். பிற்காலத்தில் எழுந்த பாடலொன்று சொற்சுருக்கமாகப் பழவடியார் பெருமை பேசுகின்றது.

ஆக்கையெனும் புழுக்குரம்பை அணைந்தணையாப் பொருளை
அருளொளியைப் பராபரத்துக்கு அப்புறமாம் அறிவை
நீக்கமற மயிர்முனைக்கும் இபமற எங்கெங்கும்
நிறைந்து நின்ற முழுமுதலை நினைவிலெழுஞ்சுடரைப்
பாக்கியங்கள் செய்த நந்தாத் தவக்குறைகள் முடிக்கும்
பழவடியார் தமக்குதவும் பசுந்துணர்க் கற்பகத்தை
வாக்குமன விகற்பத்தால் அளவுபடா ஒன்றை
மாசற்ற வெறுவெளியை மனவெளியில் அடைப்பாம்.

- வரகுணபாண்டியன் தேவியார்

எனவே இந்த மூவரையும் பற்றி இனிச் சிந்திப்போம். முருகுப்பிள்ளைச் சுவாமிகள் அல்வாயின் தவமைந்தர். பாரதியின் ஞானகுரு அருளம்பலசுவாமிகளின் தாயகமும் அதுவே. திருவாசக சுவாமிகளின் (ஸ்ரீமத் சபாரத்தினம்) தந்தையாரும் அவ்வூருக்குச் சொந்தக்காரர். முருகேசு சுவாமிகள் வடமராட்சி தும்பளையைச் சேர்ந்தவர். தவத்திரு மயில்வாகனம் சுவாமிகள் யாழ்/ ஆனைப் பந்தியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

தகரமடத்தைச் சேர்ந்த ஒரு கடையிலே முருகுப்பிள்ளைச் சுவாமிகள் தங்கியிருந்தார்கள். அடியார் மடத்திலே முருகேசு சுவாமிகள் தொண்டாற்றிக் கொண்டிருந்தார். தெற்கே, தென்னஞ் சோலையோரம் அமைந்த ஆனந்தாச்சிரமமே மயில்வாகனஞ் சுவாமிகளின் தவக்குடில். இம்மூவரும் காவியணியாது வெண்துகில் அணியும் அருட்செல்வர்கள்.

முருகேசு சுவாமிகள் கழுத்திலே ஒரு மெல்லிய துளசிமணி மாலை அணிந்திருப்பார். சிறந்த சோதிடரும் கூட. இவர் அநுராதபுரத்திலே வணிகராய் வாழ்ந்தாலும் சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவர். இல்லறம் கண்ட ஞானி. முருகுப்பிள்ளைச் சுவாமிகள் வர்த்தகராய், இல்லறம் மேற்கொண்டாலும் மனத்துறவு கண்டவர். மயில்வாகனம் சுவாமிகளும் முருகுப்பிள்ளைச் சுவாமிகளும் திருவண்ணாமலை ரமணமுனிவரின் சீடர்களாய் இருந்து,

அந்த மகானின் ஆசி பெற்றவர்கள். அண்ணாமலை ரமணசோதியின் ஆணையைச் சிரமேல் தாங்கி மயில்வாகனமும் முருகுப்பிள்ளையும் சந்நிதி வந்தனர். நீ போய் அன்னதானத் தொண்டு செய் என்ற அருள் வாக்கால் - செல்வச்சந்நிதியை அண்டி தென்னங்கீற்றுக் கொட்டில் அமைத்துத் தன் பணியை மேற்கொண்டார் மயில்வாகனனார். கொடிகாமம் ஸ்டேசனில் இறங்கும்போது, சுவாமியின் வாக்குப்படி விண்ணிலே கண்ட கருடாழ்வார் பறந்த திசை நோக்கிப் போய்ச் சந்நிதி சேர்ந்து ஒரு கடை நடத்தி ஆத்மீக வியாபாரம் செய்த தவப் பெரியார் முருகுப்பிள்ளை. இவரின் ஞானகுரு சந்நிதியில் இருந்த மறவன்புலவு சின்னத்தம்பிச் சுவாமிகள். இவர் கடவுள் என அழைத்தமையாற் கடவுட் சுவாமி என மக்களால் அழைக்கப்பட்டார். முருகேசு சுவாமிகள் வயிற்றிலேற்பட்ட நோயைப் பல டாக்டர்களிடம் காட்டித் தீர்க்க முடியாமற் கஷ்டப்பட்டு ஈற்றில் ஆற்றங்கரையானைத் தஞ்சமென்று கிடந்து, அடைக்கலம் புகுந்தார். கந்தன் கை கொடுத்தான். எனவே கந்தனடியவராகி அவன் தொண்டே தொண்டாக வாழ்ந்தார். இவர்களோடு நான் பழகிய வேளை கண்ட அனுபவங்களில் சிலவற்றை வாசகர்களோடு பகிர்ந்து கொள்வதும் பொருத்தமே.

கடவுட் சுவாமிகளிடம் பெரும்பாலும் ஞாயிறு தோறும் சிலர் வருவார்கள். நானும் போவேன். ஞாயிறு தவறினால் - வெள்ளிக்கிழமையிற் போவேன். அவருக்கு ஒளி பாயும் கண்கள். ஆனந்த சயனம் போல் கட்டிலில் தலைப்பக்கம் உயரச் சாய்ந்திருப்பார். அவர்களது கண்களைப் பார்த்துக் கொண்டு நாம் நின்றால், அவர் எம் நெற்றிப் புருவ மத்தியிற் திருநீறு இட்டு விடுவார். அவரது ஒளிபடைத்த கண்களின் வீச்சு எம் கண் வழிபுகுந்து ஒரு ஆத்மீக அலையைத் தரும். நாம் புத்துணர்ச்சி அடைவோம். அவரது சிறப்பம்சங்களிலொன்று - தன் வலப் பாரிசத்தின் மேலே குருதேவர் சின்னத்தம்பிச் சுவாமிகளின் படத்தை வைத்து வணங்குவது. தேத்தண்ணி குடிக்கும்போது அவருக்கு நிவேதனம் செய்து தான் குடிப்பார். சாப்பாடு, பழங்கள் போன்ற எல்லாமே அர்ப்பணம் செய்தே அருந்துவார். சிவந்தமேனி, தாடியும், குடுமியும் வளர்த்திருப்பார். தேசோமயமான தோற்றம். இளையபாரதத்தைப் பாரதி “ஒளிபடைத்த கண்ணினாய் வாவா” என்றழைக்கிறார். அது இவருக்கும் பொருந்தும். ஒரு நாள் அவரிடம் போய் இருந்தேன். வேறு யாரும் அந்நேரம் வரவில்லை.

---

*நாம் செய்யும் செயல்களே நமக்கு விதியாய் அமைகின்றன.*

மண்ணெண்ணெய் ஸ்ரோவிற் சமைப்பதுதான் வழக்கம். என்னைச் சமைக்கச் சொன்னார். எனக்குச் சமையல் என்றால் என்னென்று தெரியாது. எனவே என் நிலைமையைச் சுவாமிகளிடம் சொன்னேன். நான் சுவாமி சொன்னபடி செய்தேன். இறை குத்தி அரிசி போடும்படி சொன்னார். அவர் வழிப்படுத்த நான் சமைத்து விட்டேன். அன்று தான் சுவாமிகளின் சமையல் திறன் விளங்கியது. பின் சிலர் வந்தனர். மதிய போசனம் வேறு சிறப்பாய் நிறைவானது.

இவருடைய குருதேவர் சின்னத்தம்பிச் சுவாமிகளின் வழி இவருக்கும் திருவாசகம், தாயுமானார் பாடல்களில் நல்ல பரீட்சயம். எனவே ஒரு தினம் என்னைத் தாயுமானவர் பாடல்களைப் படிக்கச் சொன்னார். எனக்கும் அப்பாடல்களில் நல்ல ஆட்சியுண்டு; படித்தேன். படிக்கும்போது பிழைவிட்டுவிட்டேன். பிழையாய்ப் படிக்கிறாய் திருப்பிப் படி என்றார். அச்சமூகத்தில் நாலைந்து பேர் இருந்தனர். மீளவும் பிழைவிட்டு விட்டேன். அவ்வளவுதான் சாய்ந்திருந்த சுவாமிகள் நிமிர்ந்து என் கன்னத்தில் ஒரு அறை அறைந்தார். என் கண்ணாடி பறந்தது. மூக்கிலே இரத்தம் சொட்டியது. எனக்கு ஒரு ஈகோ (EGO) முனைப்பு வந்தது. இவரென்ன எனக்கு அடிப்பது என்று. அடமட மனமே நீயேன் மமதை கொள்கிறாய், அவரிடம் அடிவேண்டக் கொடுத்து வைக்க வேணுமே என்று சாந்தப் படுத்தினேன். மீளவும் படிக்கச் சொன்னார். பிழையின்றிப் பாடினேன். அவர் மிக்க மகிழ்ச்சியடைந்தார். எனக்கு நன்கு தெரிந்த தாயுமானார் தோத்திரத்தைப் பிழையாகப் பாடியமையே அவருக்குக் கோபத்தை உண்டாக்கியது போலும். என் ஆத்மீகப் பாதைக்கு முதற் கிடைத்த தண்டனை அது. அந்த அடிதான் என்னைச் செம்மைப்படுத்தியது. அதன்பின் பலதரம் அவர் முன்னிலையில் தாயுமானார் பாடலைப் பாடும் வாய்ப்புக் கிட்டியது. தாயுமானார் பாடல், திருவாசகம் என்பவற்றுடன் அவரை விழுங்கியது ஸ்ரீமத் பாகவதம். சுவாமி சிவானந்தர் எழுதிய “குருபக்தியோகம்” என்ற நூலைப் பலமுறை என்னை வாசிக்கும்படி சொல்வார். நானும் அவர் முன்பே படித்திருக்கிறேன். அச்செவ்விய நூலைச் சைவசமயிகள் ஒவ்வொருவரும் படிக்க வேண்டும். தன் பார்வையாலும், தண்டனையாலும் என்னைத் திருத்தியமைத்த சுவாமிகளின் சமாதி மறவன்புலவிலே குருநாதன் சமாதிக்குத் தென்பாகத்தில் அமைந்துளது. நாவலப்பிட்டி ஆத்மஜோதியில் கடவுள் சுவாமி

பற்றி நான் வரைந்த கட்டுரை வெளிவந்துள்ளது. நேயர்கள் குருபக்தி யோகத்தை ஒருமுறையேனும் படித்துப் பாருங்கள். நல்ல பயனடைவீர்கள்.

யான் செல்வச் சந்நிதிப் பக்கம் போகும் போதெல்லாம், தவசாலி முருகேசு சுவாமிகளை அடியார் மடத்திலே சந்திக்கத் தவறுவதில்லை. அவருடைய சேவையென்றும் அன்னதானப் பணியாய் இருந்தது. உரும்பிராயில் செல்லையா அண்ணை வீட்டிற் சமூகமளித்திருந்த போதெல்லாம் போய்ப் பார்ப்பதை என் கடமையாய்க் கருதினேன். இடையிடையே சுவாமிகள் எம் வீட்டிற்கும் வருவார்கள். ஒரு முறை பருத்தித்துறையில் இருந்து எனது கிராமத்தில் அமைந்திருந்த வல்லிபுர ஆழ்வாரைத் தரிசிக்கப் பஸ் ஏறியபோது சுவாமிகளையும் கண்டு ஆனந்தித்தேன்(1983). வல்லிபுரக் கோயிலின் வரலாற்றை எழுதி - கையெழுத்துப் பிரதியாக வைத்திருந்தேன். விடயத்தை அவர் காதிற் போட்டேன். உடனே தன் வல்லுவத்தில் இருந்து (வல்லுவம் பணம் வைக்கும் பை) 250 ரூபாவை எடுத்துத் தந்து, ஆசி வழங்கி அந்நூலை வெளியிடு என்றார். காரியம் கண்ணன் அருளால் நிறைவேறியது. அவரின் நிறைவுரை (14-05-1983) ஆழ்கடலான் என்னும் அந்நூலை அலங்கரிக்கிறது. அவரின் படமொன்று கனடாப் பேப்பர் ஒன்றில் வெளியானது. அதை வெட்டியெடுத்துத் தினமும் வணங்கும் வாய்ப்பும் கிடைத்தமை சந்நிதியான் திருவருளே.


மயில்வாகனம் சுவாமிகள் வள்ளலார்போல வெண்மையான வேட்டி கட்டி உடம்பை வெண்துகிலால் மறைத்துக் கொள்வார். ஈழத்துப் பழவடியார் மரபைப் பெரிதும் போற்றிப் பேணியவர். உண்டி கொடுப்பதோடு தன் கடமை நிறைந்ததென அவர் இருப்பதில்லை அடியார்கள் சிவபக்தர்களுக்கு உடையும் வழங்குவார். பஸ்ஸிலே போகப் பணமும் கொடுத்து உதவுவார். ரமண மகரிஷி காட்டிய பாதையிற் கர்ம வீரராய்த் திகழ்ந்தவர். ஆச்சிரமத்தில் ரமண மன்றம் அமைத்துப் பலரை ஆதரித்தவர். என்கடன் பணி செய்து கிடப்பதுவே என்பதற்கு இலக்கியமானவர். அவர் என் குருநாதனோடும் (சபாரத்தினம் சுவாமிகள்) அன்பர் வடிவேலருடனும் மிக்க நெருக்கமானவர். அவர்கள் மூலம் எனக்குப் பரிச்சயம் ஆனவர். என்னை ஆழ்கடலான் என்றே அழைப்பார். திருவாசக சுவாமிகள் அங்கே தங்கியிருந்தபோது நான் அவரிடம் அடிக்கடிபோவேன். அக்காலகட்டத்தில் அவரோடு சம்வாதம் செய்யும்

வாய்ப்புக் கிட்டியது. அந்த ஞானக் கடலில் அள்ளித் தெளித்த தீர்த்தம் என்னைத் தூய்மையாக்கியது. அகமும் புறமும் வெளுத்த அவர் தாயுமானாரில் நல்ல ஈடுபாடுடையவர். வாதவூரரின் குருபூசையின்போது அவர் பாடிய "அரஹர சிவ சிவசிவ சம்பு" என்ற பாடலொலி விண்ணைப் பிளந்தது. கர்ப்பூரப் பஞ்சாராத்தி கண்ணிலே ஒளி வீசுகின்றது. அவரின் சகவாசம் ஆன்மிக நெறியில் என்னை உயர்த்தியது. அவரின் உடற்பிரிவின் போது, அவரைப் பற்றி ஒரு கட்டுரை எழுதி ஈழநாட்டில் வெளியிட்டேன். எனவே திரிவேணி சங்கமமான முருகுப்பிள்ளை, முருகேசு, மயில்வாகனம் ஆகியோர் தொடர்பு என் குருநாதனின் பெருவருளால் ஏற்பட்டது. மயில்வாகனம் சுவாமிகளுடன் இருந்த மோகனதாஸ் அவர்கள் குருவின் பாதையிற் பன்முகப்பட்ட தொண்டாற்றி வருகிறார். சந்நிதியான் ஆச்சிரமத்தில் அதுவும் குருபக்தியோகத்தின் பயனேயாம்.


**R & S AUTO SALES**

**Top Quality New & Used Cars**

**வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பது எமது விசேட திறன்**


RADHA

**TEL: 416-412-3838**
**FAX: 416-412-1174**

**4362 Sheppard Ave. East,**
**Scarborough, ON.**
**Between Brimley & Midland**

# பற்று

அருள்ஞானி ஆறு. வீரப்பன், சிதம்பரம்

"இருக்கின்ற போது நாம் ஈட்டிய பொருட்கள் இறக்கின்ற போது வாராத பொழுது, இறக்கின்றபோது எது வருமோ அதை இருக்கின்ற போது ஈட்டுவதறிவு."

- அருள்ஞானி ஆறு. வீரப்பன், சிதம்பரம்

**பிறவி வேண்டுமா?**

உலகப்பொருள்களின் மீது நாட்டம் உள்ளவரை, நமது உலகப்பற்றுகள் நம்மைவிட்டு நீங்கா. நமது பற்றுகள் தொடரும் வரையிலும், பிறவிகளும் தொடர்ந்து கொண்டே இருக்கும். ஒவ்வொரு பிறப்பிலும் புதிய புதிய வினைகளை, (நல்வினை/ தீவினை) ஈட்டுவதால் அவற்றின் பலன்களைத் துய்ப்பதற்காகப் பிறவிகளும் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

உலகப் பற்று - பிறப்பு (இறப்பு) - இருவினைகள் பிறப்பு(இறப்பு).....என்று பிறவிச்சக்கரம் சுழன்று கொண்டே இருக்கும்.

மனிதன் மீண்டும் மனிதனாகத்தான் பிறப்பான், வேறு உயிரினங்களாகப் பிறக்க மாட்டான் என்று கூறமுடியாது. உயிர்கள் அச்சுமாறிப்பிறக்கும் என்று சாத்திரங்கள் பகர்கின்றன. எனவே நாம் செய்கின்ற நல்வினை தீவினைகளுக்கேற்ப உயரிய பிறப்புகளோ அல்லது இழிந்த பிறப்புகளோ எடுக்க நேரிடும். மீண்டும் ஒரு மானிடப் பிறப்புக் கிடைப்பது அரிது. அதனால்தான் சான்றோர்கள் அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்கின்றார்கள்.

மானிடப்பிறவி கிடைத்தாலும், அதன் ஆயுட்காலம் எவ்வாறு கழிகின்றது? ஒரு மனிதனின் முழு ஆயுட்காலம் நூறு ஆண்டுகள் என்று வைத்துக் கொண்டால், ஐம்பது ஆண்டுகள் தூக்கத்திலேயே கழிந்து விடுகின்றன. மீதமுள்ளன ஐம்பது ஆண்டுகள்தானே. அந்த ஐம்பது ஆண்டுகளின் நிலை என்ன? பதினைந்து ஆண்டுகாலம் ஏதுமறியாப் பாலகனாகக் கழிகின்றது. மீதமுள்ள நாட்களில் பசியும், பிணியும், துன்பமும், மூப்பும் பின் சாக்காடும் போக எஞ்சிய நாட்கள் எத்தனை?....எனவேதான் அருளாளர்கள் பிறப்பை அறுக்கத் திருவடியாகிய பேரின்பத்தை இறைவனிடம் வேண்டுகின்றனர்.

---

*அறச் செயல்களால் ஆயுள் வளரும்.*

**மானுடப் பிறவியின் நோக்கமும் பயனும்**

நாம் கிடைத்தற்கு அரியதொரு மானுடப் பிறவியைப் பெற்றுள்ளோம். அதன் நோக்கமும் பயனும் யாவை? நமது அருளாளர்கள் அவற்றை ஆய்ந்து நமக்கு நல்வழி காட்டியிருக்கின்றனர். பேரின்பமாகிய முத்தி ஒன்று உண்டு என்று அறியாதோர் "முத்தி நெறி அறியாத மூர்க்கர்" - (திருவாசகம்).

உலகத்துச் சிற்றின்பங்களே பேரின்பங்கள் என்று கருதி உலக மாயையில் மூழ்கி விடுகின்றனர். உலகப் பற்றின் காரணமாகப் பிறந்தும், இறந்தும் உழல்கின்றனர். பிறவிச் சாகரத்தினின்றும் கரையேற மாட்டாது தவிக்கின்றனர். உலகத்தில் நாம் தேடிச் சேர்க்கின்ற பொருள்கள் யாவும் நிலைத்த தன்மை உடையன அல்ல. இந்த உலகத்து வாழ்வும் நிலைத்த தன்மை உடையது அன்று. இளமையும் நிலையாதொழியும். அதனால்தான் உலகப்பொருள்களால் நாம் பெறும் இன்பத்தைச் சான்றோர்கள் சிற்றின்பம் என்று கூறுகின்றனர். எனவே இதற்கு மாறான பேரின்பம் ஒன்று உண்டு என்று தெரிகின்றது. அந்தப் பேரின்பமாகிய முத்தியைப் பெறுவதே மானுடப்பிறவி எடுத்தோர் பெறும் உயரிய பயன் ஆகும். அந்த எல்லையில்லாத பேரின்பத்தை அடைவதே மானுடப்பிறவியின் நோக்கமாகும்.

மானுடப்பிறவி தானும் வகுத்தது, மனவாக் காயம்
ஆன் இடத்து ஐந்தும் ஆடும் அரன் பணிக்கு ஆக அன்றோ
வான்இடத்தவரும் மண்மேல் வந்து அரன்தனை அர்ச்சிப்பர்
ஊன்எடுத்து உழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ!
- சிவஞான சித்தியார் 182

இப்பாடலின் பொருளாவது பிறப்பை நீக்குதல் பொருட்டு, பசுவினிடத்து உண்டாகும் பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்னும் பஞ்ச கவ்வியத்தினை, அபிடேகமாகக் கொண்டு அருளும் சிவபெருமானை, மனத்தால் நினைந்தும், வாக்கினால் அவன் புகழைப் பாடித் துதித்தும், மந்திரங்களைச் செபித்தும், காயத்தால் பணிந்தும் வழிபாடு செய்ய வேண்டும். இந்த வழிபாடு ஏனைய பிறவிகளில் செய்தல் கூடாமையால், இந்த வழிபாட்டின் பொருட்டாக அன்றோ, பிறவி விசேடம் ஆகிய மானுடப் பிறவியை, முன் செய்த தவத்தால் வகுத்தது ஆகும்?

---

*நம் செயல்களே நமது புகழைப் பேசும்.*

மேல் உலகத்தில் உள்ள விட்டுணு முதலிய தேவர்களும் சிவபெருமானை வழிபடுவது ஏனைய உலகங்களில் கூடாமையால், தேச விசேடம் ஆகிய இந்த மண்ணுலகத்தில் வந்து அவனை அர்ச்சித்து வழிபடுவர். அவ்வாறு வழிபடுதற்கு உரிய இந்த உலகத்தில், அதற்கு உரிய மானுடச் சரீரம் பெற்று, வழிபட வேண்டும் என்னும் உண்மையை, பிறவியில் பட்டு உழலும் ஊமர் ஆகிய ஏனையோர் சிறிதும் அறிய மாட்டார். எனவே, மானுடப் பிறவியின் பயன் சிவவழிபாடே என்பது இனிது புலப்படும்.

மானுடப் பிறவியின் பயன் மனம், மொழி, மெய்களால் அரன் பணி செய்து, ஈசனைத் தேடி அடைவதேயாகும். அதுவே பிறவாமையையும், அளவிலாப் பேரின்பத்தையும் நல்கக்கூடியது.


**பற்றுதலே பற்றறுக்கும்**

உடல்பற்றும், உலகப் பற்றும் பிறவிக்குக் காரணமாக அமைகின்றன. மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்பதும், அப்படி வாழ்வதனால் சிவபெருமானின் திருவடியை அடைவதற்கு யாதுமோர் குறைவில்லை என்பதும் திருஞானசம்பந்தர் திருவாக்கு. எனவே உலகப்பற்றுக்களை நீக்க வேண்டும் என்று கருதி நாம் அவற்றோடு போரிட வேண்டியதில்லை. உயிரானது என்றும் தனித்து நிற்கும் தன்மையுடையது அன்று. ஏதாவது ஒன்றினைப் பற்றியே நின்று செயற்படும் தன்மை உடையது. சிறு குழந்தை விளையாடும்போது பொம்மைகளைப் பற்றிக் கொள்கிறது. அந்தப் பொம்மையை நாம் கேட்டால் தர மறுக்கிறது. பிற குழந்தைகள் அந்தப் பொம்மையைப் பறித்துக் கொண்டால் அழ ஆரம்பிக்கின்றது.

இதற்குக் காரணம், அதற்குக் குழந்தைப் பருவத்தில் பொம்மைகள் மீது நாட்டமும் பற்றும் அதிகமாக இருப்பதேயாகும். அந்தக் குழந்தையே இளைஞனாக மாறுகின்ற காலத்தில் அந்தப் பொம்மைகளையே பிடித்துக் கொண்டிருப்பதில்லை. அவற்றை விட்டுவிடுகின்றான். அதற்குக் காரணம் இளைஞனின் நாட்டம் வேறு திசையில் மாறிவிடுகின்றது. அதனால் பொம்மைகள் மீது உள்ள நாட்டமும் பற்றும் அவனுக்கு அறவே ஒழிந்து விடுகின்றன. அதுபோல உலகப் பொருள்களைப் பற்றிக் கொண்டிருக்கிற உயிரின் நாட்டம் இறைவன்பால் மடைமாற்றம் அடையும்பொழுது அவனது உலகப் பற்று படிப்படியாகத் தேய்ந்து அவனை அறியாமல் நீங்குகின்றது.

---

*அநாதையின் கண்ணீர் ஆண்டவனிடம் செல்லும்.*




எனவே பிறவிக்கும், துன்பத்திற்கும் காரணமான உலகப்பற்றிலிருந்து விடுபட இறைவனைப் பற்றுவது ஒன்றே சிறந்த வழியாகும்.

இதனையே திருவள்ளுவரும்

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்று மிகத் தெளிவாகக் கூறியிருக்கின்றார்.

**இறைப்பற்று**

உலகப் பொருள்களில் நாட்டமும், பற்றும் உடைய மக்கள் "எனது வீடு" "எனது நிலம்" என்று சொல்வது போல இறைப்பற்று மிகுந்தவர்களும் "எமது இறை" என்று கூறுவதைக் காணலாம். எடுத்துக்காட்டாக திருமூலர் கீழ்வரும் திருமந்திரப் பாடலில் சிவபெருமானை "எம் இறை" என்று அழைப்பது அவரது இறைப்பற்றின் வெளிப்பாடு எனலாம்.

*ஒரு நிமிடக் கோபம் ஒருவருடப் புகழை அழித்து விடும்.*


பொன்னாற் புரிந்திட்ட பொற்சடை யென்னப்
பின்னாற் பிறங்க இருந்தவன் பேர் நந்தி
என்னால் தொழப்படும் எம்இறை மற்றவன்
தன்னால் தொழப்படு வாரில்லை தானே.

- திருமந்திரம் 44 -

இதன் பொருளாவது, என்னால் வணங்கப்படுகின்ற எங்கள் சிவபெருமான், தனது பொற்சடை பொன்னால் செய்யப்பட்டனவே என்னும்படி பின்னலோடு விளங்குமாறு இருப்பவன். நந்தி என்னும் பெயருடையவன். அவனால் வணங்கத்தக்கவர் ஒருவருமில்லை என்பதாகும்.

மானுடப்பிறவி நிலையில்லாதது. உலகியல் இன்பங்கள் யாவும் சிற்றின்பங்களேயாகும். அவை யாவும் இன்பம் போல் தோன்றித் துன்பத்தில் முடிவன. உலகப் பற்று பிறவிக்கு வித்தாகும். பிறவியினால் வினைகளும், வினைகளால் பிறவியும் தொடர்ந்துவரும். உலகப் பற்று நீங்கிட இறைவனைப் பற்றுவது ஒன்றே வழியாகும். இறைவனைப் பற்றுவதால் பிறவாமையும், பேரின்பமும் வந்தெய்துகின்றன.

- திருச்சிற்றம்பலம் -

SVKRK JOTHISHAM
மீனாஷி இந்துமத சேவை

ஜோதிடமாமணி, சிவாச்சார்யாமணி
ஸ்ரீலஸ்ரீ விஸ்வநாத ரெங்கநாதக் குருக்கள்
இந்துமத குரு, ஜோதிடர், திருமணப் பதிவாளர்
TEL: 416-570-4763 FAX: 416-847-9744
Wep: www.svkrkjothisham.com
E-mail: info@svkrkjothisham.com

சிவமயம்

# சைவசித்தாந்தம்

சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்

சைவசித்தாந்தம் கணிதசாத்திரத்தைப்போல யாவராலும் அங்கீகரிக்கத்தக்கது. எப்படியெனில், அதற்குப் பிரமாணமா யுள்ளவை காட்சி, கருதல் ஆகிய இரண்டுமே. காட்சியாவது கண், காது முதலிய பொறிகளால் அறியப்படுமுணர்வு. இந்த உணர்வு எவர்களும் ஏற்கத்தக்கது. வேறு சில சமயங்கள் காண்டல் கருதலாகிய இவற்றைப் பிரமாணமாகக் கொள்ளாது, யாராவது ஒருவர் கூறியதைப் பிரமாணமாகக் கொண்டு, அதை நம்பவேண்டுமென்று கட்டாயப்படுத்தி, அதை நம்பாதவர்களுக்கு நரகம் கிடைக்குமென்று வெருட்டுகின்றன. அப்படியான சமயக் கொள்கைகளை எல்லாரும் ஏற்கமாட்டார்கள். சைவசித்தாந்தம் அந்த வழிக்குப் போகாமல் காண்டல் கருதலோடு மாத்திரம் நிற்றலினாலே அதிற் கூறப்படுபவை உலகம் முழுவதும் அங்கீகரிக்கத்தக்கவை. இந்த முறைமை சைவசித்தாந்த சாத்திரங்களிலொன்றாகிய சிவஞான போதத்தின் முதற் சூத்திரத்திலமைந்திருப்பதைக் காட்டுகிறேன். அந்தச் சூத்திரம் பின்வருமாறு:

அவன் அவள் அதுவெனும் அவைமூவினைமையின்
தோன்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தமாதி என்மனார் புலவர்.

இதன்பொருள்: நாம் காணும் பிரபஞ்சம் அவனென்றும், அவளென்றும், அதுவென்றும் குறிக்கும் பலவேறு வகைப்பட்ட பொருள்களை உடையதாதலால் இது தோற்றப்பட்ட பொருளாம். இது இவ்வாறு விரிந்தது மலமிருத்தலினால் இதைத் தோற்றுவிப்பவன் அரன். இவ்வாறு கூறுவர் தர்க்க நூலிற் சிறந்தோர்.

இந்தச் சூத்திரத்திலே காட்சியைப் பிரமாணமாகக் கொண்டு ஆணென்றும், பெண்ணென்றும், மிருகமென்றும், பறவையென்றும், புல்லென்றும், பூண்டென்றும் பலவேறுவகைப்பட்ட வடிவங்கள்

---

*துன்பத்தால் மனம் தூய்மையடையும்.*

இருத்தல் நிச்சயிக்கப்படுகின்றது. இந்தப் பொருள்களெல்லாம் அணுக்களாலாக்கப்பட்டவை, காட்சியால் உணரப்படத்தக்கவை, ஆதலால் இந்த உலகம் அணுக்களில் நின்றும் தோன்றியதென்பது கருதலாற்பெறப்படும். இந்த அணுக்களும் பகுக்கப்படத் தக்கனவாயின் அப்படி வகுத்துக்கொண்டு போகும்போது இறுதியில் பகுக்கப்படாத ஒருபொருள் வருமென்பது கருதலாற் பெறப்படும். இதற்கு ஒரு பொருள் வேண்டும். இப்பொருள் மாயை எனப்பட்டது.

மாயை என்ற சொல்லுக்கு ஒடுங்கி விரிவது என்பது கருத்து. ஒடுங்குதலாவது காரியம் காரணமாதல், அதாவது காரியமாகிய உலகம் தான் தோன்றுதற்குக் காரணமாகிய மாயை ஆதல். விரிதலாவது காரணம் காரியமாதல். அதாவது மாயை உலகமாதல். உலகம் மாயையினின்றும் தோன்றியதென்று காட்டப்பட்டது. ஆனால் மாயை தானாக எப்படி உலகமாகும்? மாயை தானாக எப்படி ஒருமனித வடிவத்தையும் ஒரு மர வடிவத்தையும் எடுக்கும்? அணுக்கள் தாமாகவே ஒன்றோடொன்று சேரவும், பிரியவும் தமக்குள் வல்லமையுடையன என்று வைத்துக் கொள்வோம். இரண்டு வகையான அணுக்கள் சேர்ந்து தண்ணீர் உண்டாகின்றது. எவ்வளவு காலம் சென்றாலும் அவைகள் அந்த அளவாகச் சேர்ந்தால் நீராகுமன்றி வேறொன்று மாகமாட்டா. ஆயினும் உலகத்திலே காணப்படும் பொருள்கள் ஒவ்வொன்றும் தம்மிலும் வேறானவைகளாய்த் தோற்றியே ஆண் பெண் முதலிய பேதங்களை உண்டாக்கின. அந்தப் பேதத்தை ஆக்கக்கூடிய வல்லபம் அணுக்களுக்கில்லை. அந்த வல்லபம் வேறொரு பொருளிலிருந்து வரவேண்டும். அந்தப் பொருள் இந்த அணுக்களை யாளத்தக்கதாகவும் இருக்கவேண்டும். அந்தப் பொருளுக்கு ஒரு பேர் வேண்டும். அது **கடவுள்** எனப்பட்டது.

ஆகவே இந்தச் சூத்திரத்தின் முதற்பகுதி மாயை கடவுளாகிய இரண்டு பொருள்கள் இருத்தலையும் அவற்றின் தன்மையையும் காட்சியினாலும் கருதலினாலும் சாதிக்கின்றது. கடவுள் இருக்கிறார் என்பதை நம்பு என்று இந்த நூல் கட்டளை பண்ணவில்லை.

இந்தச் சூத்திரத்தின் இரண்டாம் பகுதி இந்தப் பிரபஞ்சந் தோற்றுதற்குக் காரணமென்ன வென்பதை ஆராய்கின்றது. மனிதர், மிருகம், பறவை முதலிய இவைகள் ஒவ்வொன்றிலும் ஒரு பொருள் இருப்பதைக் காண்கிறோம். அந்தப் பொருளுக்கு சீவன் அல்லது

உயிர் என்று பெயர். இந்த உயிர்கள் யாவற்றிலும் குறைபாடு இருக்கின்றது. இவைகளுக்குட் சிறந்ததாகிய மனிதப் பிறவியில்தானும் அறிவுக்குறைவு அன்புக்குறைவு செய்கைக்குறைவு ஆகிய குறைவுகள் இருக்கின்றன. இது காட்சியாற் பெறப்படுவது. இதற்குக் காரணம் ஒன்று இருத்தல் வேண்டும். இந்தக் காரணத்துக்கு ஒரு பெயர் வேண்டும். அது ஆணவம் எனப்படும். ஆணவம் என்ற சொல்லின் கருத்து அணுவாக்குவது என்பது. அதாவது உயிர்களின் வல்லபங்களை அணுவாக்குவது. சூத்திரத்தின் இரண்டாம் பகுதியிலிருந்து உயிர் ஆணவமாகிய இந்த இரண்டு பொருள்கள் இருத்தலும், அவைகளின் தன்மையும் காட்சி கருதலாகிய இரண்டினாலேயே பெறப்பட்டன. இப்படியே சைவசித்தாந்தம் கணித சாத்திரம்போல, யாவரும் ஏற்கக்கூடிய உண்மைகளையே உடையது. இதையுணராத பேதையர் சைவசித்தாந்தம் ஒடுங்கிய மனப்பான்மையுடையோர்க்குத் தக்கதென்று பிதற்றுவர். இனிமேல் இந்த நான்கு பொருள்களுடைய தன்மையையும் காண்டல் கருதல் என்ற இரண்டு பிரமாணங்கள் கொண்டு ஆராய்வோம்.

**கடவுள்**

இந்தப் பிரபஞ்சத்தையெல்லாம் தோற்றுவிப்பவர் கடவுள் என்றோம். ஆதலால் இந்தப் பிரபஞ்சத்திலே நடக்கும் செயல்களெல்லாம் அவரிலிருந்தே தோன்றுவன. இதனாலே அவருக்குச் சர்வவல்லமையுண்டென்று சொல்வதுண்டு. அப்படிச் சொல்லுவது கடவுளுக்கு ஒரு குறைவாக முடியும். எப்படி யென்றால், ஒரு தடையை நீக்குதற்குத் தான் வல்லபம் வேண்டும். உதாரணமாக இந்தக் கல்லைப் பிளக்க வல்லமை எனக்குண்டு என்று நான் சொல்லலாம், பிளப்பதற்குத் தடையிருப்பதனால். இந்தத் தண்ணீரைப் பிளப்பதற்கு வல்லமை எனக்குண்டு என்று நான் சொல்லக்கூடாது. அது போலப் பிரபஞ்சம் முழுவதும் அவருடைய ஆணைக்குள் நிற்றலால் அவருக்கு வல்லமை தேவையில்லை. இதுபோலவே கடவுள் எல்லாம் அறிபவர், எங்கும் உள்ளவர் என்பனவும் கடவுளுக்கு இழுக்கானவைகளாம். இதனாலேதான் கடவுளுக்கு எதிர்மறையிலக்கணங்கள் சிவஞானசித்தியாரிற் சொல்லப்பட்டன. ஆயினும் அவருடைய

*வஞ்சனையுடையவர் எவரிடமும் அணுகாதவர் இறைவர்.*

தன்மைகளுள் ஒன்றின் பயனை நாங்கள் யாவரும் எப்போதும் அறிந்து கொண்டிருக்கிறோம். அது என்னவென்றால் அவருடைய எல்லையில்லாத அருள். அணுக்களால் ஆக்கப்பட்ட பிரதம சீவனை சம்பந்த சுவாமியுடைய திருவுருவத்தின் நிலைக்குக் கொண்டுவந்து அதன்வழியாக எல்லையில்லாத அறிவையும் ஆற்றலையும் பெறச் செய்த பொருள் அன்பில்லாமல் வேறெது? இந்த நேசமே கடவுளுடைய இலட்சணங்களுள் நாம் அறிந்த ஒன்று. இது பிரபஞ்சம் முழுவதும் நின்று பிறவிகளை மேற்படுத்தி ஆன்மாவின் அறிவு தொழில் இச்சைகளை ஏற்றி வருகின்றது. இது ஆன்மாக்களுக்குத் தக்க தக்கபடி உடல்களைக் கொடுத்து அவ்வுடல்களை இரட்சித்து, உடலோடு வாழும்போது ஆன்மாவுக்கு வேண்டிய அறிவைக் கொடுத்து அதற்கு உரிய செயல்களைச் செய்வித்து செயல்களின் பயனாகிய இன்பதுன்பங்களை அனுபவிப்பித்து ஆணவமலத்தின் வலியைத் தடுத்து, நல்வழியிற் செலுத்துகின்றது. பெற்ற உடல் ஆன்மாவுக்குப் பொருந்தாமல் நேரும்போது இது அந்த உடம்பை நீக்கி, அதற்குரிய வேறு நிலையில் விடுகின்றது. இறுதியில் ஆணவமலத்தின் தடையை முற்றாக நீக்கி ஆன்மாவைச் சிவமாக்குகின்றது.

இவற்றுள் சிவமாதல் நெடுங்கால முயற்சியால் வருவது. சிவமாவதற்கு முன் சிவத்திலே எல்லையில்லாத பற்று வரவேண்டும். அந்தப் பற்று வருவதற்கு மற்றைய பொருள்களிலுள்ள பற்று நீங்க வேண்டும். மனமானது ஏதாவது ஒரு பொருளைப் பற்றாமல் இராது. எதிலே அதற்கு உறுதியான பற்றோ அதையே அது நாடும். வேறெந்தத் தொழிலில் நின்றாலும் அதிலேதான் செல்லப்பார்க்கும். உதாரணமாக விளையாட்டிலே அதிகப் பற்றுள்ள மாணாக்கர்களுடைய மனம் பாடங்கேட்கும் போதும் விளையாட்டிலேயே சென்று கொண்டிருக்கும். உலகப் பற்று அதிகம் உள்ளவர்கள் கடவுளை நினைக்கும்போதும் உலகப் பொருள்களிலேயே அடிக்கடி மனத்தைச் செலுத்துவார்கள். ஆதலால் கடவுளிலே மிகுந்த பற்றுக் கொள்ள வேண்டுமானால் அந்த வழியிலேயே மனத்தைச் செலுத்திப் பழக்க வேண்டும். இதற்கு நாம் முதற் செய்ய வேண்டியது கடவுளை நினைத்தல், நினைத்த பின்பு தான் பற்றுண்டாகும். ஆயினும் கடவுள் எங்களுடைய நினைப்புக்கு எட்டாதவர். ஆதலால் எமது மனத்துக்கு எட்டக்கூடிய ஒரு வடிவமாகக் கடவுளை நாம் நினைக்க வேண்டும்.

---

*சடங்குகளால் இறைமையை உணர முடியாது.*

அந்த வடிவம் கல்லினாலேனும் உலோகங்களினா லேனும் ஆக்கப்பட்ட விக்கிரகங்கள் ஆகலாம், அல்லது அவைகளைப் போல மனத்திலே கற்பிக்கப்பட்ட வடிவங்களாகலாம். இவைகளைக் கடவுளாகப் பாவித்து இவைகளை நினைத்து இவைகள் மூலமாகவே கடவுளிலே அன்பைச் செலுத்தி அந்த அன்பை வளர்த்துக் கொண்டு வரவேண்டும். கண்ணுக்குத் தோற்றாத ஒரு பொருளுக்குப் பதிலாகக் கண்ணுக்குத் தோற்றக்கூடியதாக ஒரு வடிவம் உண்டாக்கும் ஒரு வழக்கம் எல்லாரிலுமுண்டு. எழுத்துக்களின் ஒலிகள், அவை கண்ணுக்குத் தோற்றாதவை. ஆயினும் அவற்றுக்குப் பதிலாக எழுத்து வடிவங்களையுண்டாக்கி அவைகளை எழுதியும் வாசித்தும் வருகின்றோம். ஆதலால் கண்ணுக்கும் மனதுக்கும் எட்டாத பொருளாகிய கடவுளுக்குப் பதிலாக இவற்றுக்கு எட்டக்கூடிய வடிவங்களைக் கொண்டு நினைத்தல் இயல்பேயாம். கடவுளை நேரேயறியும் அறிவுள்ளவனுக்கு வழிபாடு தேவையில்லை. நேரே காணமாட்டாதவர்கள் யாவரும் பதில் வடிவங்களைக் கொண்டே வழிபட வேண்டியவர்கள். ஆதலால் கடவுள் வழிபாடு செய்கிறவர்கள் யாவருக்கும் பதில் வடிவங்கள் வேண்டியவைகளாம் மானச வடிவத்தால் வணங்குபவர் சிலர் விக்கிரக வணக்கம் செய்வோரை நிந்திப்பது தகாது. மானசவடிவமும் கடவுளுடைய உண்மையான வடிவமல்லாமையினால், இப்படியான வடிவங்களை நினைத்து நினைத்து அன்பைச் செலுத்தி வளர்த்துக் கொண்டு வந்தால் எங்களுடைய மனம் கடவுளுடைய எண்ணத்தால் நிறைந்து உலகப் பொருள்களில் நாட்டமில்லாமல் அவரிலே தாகமுடையதாக வரும். அப்படி வரும்போது அவர் குருவடிவத்தில் நின்று சிவஞானத்தைத் தந்து எங்களைச் சிவமாக்குவர். இது வரையும் கடவுளைப் பற்றிப் பேசினேன். இனிப் பேச வேண்டிய பொருள் மாயை.

- தொடரும்

## கந்தபுராண படன விரிவுரை

அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் 20-04-2008 ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் கச்சியப்ப சிவாச்சாரியர் இயற்றிய கந்த புராணம் ஆறுகாண்டத்திற்கும் இந்து சமயப் பேரவையினரால் புராண படன விரிவுரை நடத்தப்படுகின்றது.

*மனிதரிடத்தில் இறைவனைப் பார்.*

# காயத்திரி மந்திரத்தின் மகிமையை உலகிற்கு உணர்த்திய முருகேசு சுவாமிகள்

ஸ்ரீ காயத்திரி சித்தர் டாக்டர் ஆர்.கே. முருகேசு சுவாமிகள் கடந்த 24-09-2007 திங்கட்கிழமை சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையில் மகாசமாதியடைந்தார். சுவாமி அவர்கள் கடந்த சில மாதங்களாக நோய்வாய்ப்பட்டு அம்மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

காயத்திரி சித்தர் முருகேசு சுவாமிகள் 26-10-1933 ஆம் திகதி காளிமுத்து ராமனுக்கும் சந்தனம்மா என்பவருக்கும் மகனாகப் பிறந்தார். கண்டி நகரில் பிறந்த இவர் நுவரெலியாவில் நீண்ட நாட்களாக வாழ்ந்துள்ளார்.

காயத்திரி சித்தர் சுவாமி முருகேசு அவர்கள் சப்தரிஷி ஒருவரால் ஆட்கொள்ளப்பட்டு நீலகிரி பொதிகை மலைச்சாரலில் சூஷ்ம ஆச்சிரமத்தில் தீட்சை கொடுக்கப்பெற்றவர். தமிழகத்தில் வாழ்ந்த அருந்தவ யோகி ஸ்ரீ கண்ணையா அவர்களிடம் சரணமடைந்து காயத்ரி தீட்சை ஏற்று அன்னை காயத்திரி தேவியின் பரிபூரண அருளைப் பெற்றார். உலகில் சாந்தி ஏற்பட காயத்திரி மந்திரமே சிறந்தது. அதையே உலகம் முழுவதும் பரப்புவதற்கு குரு உபதேசப்படி நுவரெலியாவில் காயத்திரி ஆலயம் அமைத்தார். இன்று காயத்திரி மந்திர மகிமையை நுவரெலியாவில் மட்டுமல்ல மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, போன்ற இடங்களிலும், சர்வதேச மட்டத்திலும் கனடா, அமெரிக்கா, ஜேர்மன், மலேசியா தென்னாபிரிக்கா போன்ற உலக நாடுகளிலும் காயத்ரி பீடமும், ஆச்சிரமும் அமைத்து காயத்திரி மந்திர மகிமையைப் பரப்பி வந்துள்ளார்.

சுவாமி முருகேசு அவர்கள் ஹப்த ரிஷிகளின் தொடர்பு கொண்டு காயத்திரி உயர்சாதனைகளை செய்து பெரும் ஆற்றலையும், சித்திகளையும் பெற்றவர். தன் உயர் சித்திகளைப் பணம், பொருள், புகழுக்காக வெளிப்படுத்தாது சாதாரண மக்களில் தானும் ஒருவராகவே வாழ்ந்து வந்தார். அடிக்கடி பாரதம் சென்று இமயம் முதல் குமரிவரை காடு, மலைகளில் சூக்குமமாக வாழ்ந்து வரும் சித்தர்கள் முனிவர்கள், மகரிஷிகள் போன்றோரைத் தரிசித்து ஆசி பெற்றவருமாவார்.

---

*அறச் செயல்களால் ஆண்டவரை அடையலாம்.*

இந்தப் பேருண்மையைப் புரிந்து கொண்ட பலர் இவரிடம் சரணடைந்து இவரைக் குருவாக ஏற்று இவரிடம் ஆன்ம இரகசிய வித்தைகளைக் கற்று சாதனைகளைப் புரிந்து, சித்தி பெற்ற மனிதர்களாக வாழ்ந்து வருகின்றார்கள்.

கடந்த 1994ஆம் ஆண்டு உலக ஆன்மிகப் பாராளுமன்றம் இவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்து கௌரவப்படுத்தியது. ஆங்கிலத்திலும் தமிழிலும் காயத்திரி மகிமை பற்றியும், ஆன்மிகம் பற்றியும் பல நூல்களை முருகேசு சுவாமி எழுதியுள்ளார். இவர் எழுதிய காயத்ரி தத்துவம், ஆன்மிகப் போதனைகள் தியானம் ஆகியவை பற்றிய நூல்கள் சர்வதேச ரீதியில் பாராட்டுக்களை பெற்றுள்ளது. சுவாமிகளின் மனோதத்துவம், யோகம், ஆத்மீகம், பற்றிய ஆராய்ச்சி நூல்களும் இவரின் உயர்ந்த ஆன்மீக ஆற்றலை உலகிற்கு உணர்த்தியுள்ளது.

புதுடில்லியில் உள்ள உலக அபிவிருத்தி பாராளுமன்ற அலுவலகம் உலக அபிவிருத்தித் துறையில் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது. தத்துவம், விஞ்ஞானம், இலக்கியம் ஆகிய துறைகளிலும் இவர் டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்.

அத்தோடு “மஹா அவதார”, “பிரம்மரிஷி”, “ஆதி மகாபரம், ஜெயகத் குரு” என்பன எம் குருநாதராம் பொன்மனச் செம்மலுக்கு ஆன்மீக உலகம் வழங்கிய கௌரவப் பட்டங்களாகும்.

சுவாமிகளின் பூர்வீகத் தலம், சகல தத்துவ ஞானங்களும் தோன்றிய புண்ணிய பூமியாக தென்னிந்திய நாட்டின் கண்ணாக விளங்கும் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஆவுடையார் கோயில் கிராமமாகும். இக்கிராமம் பல சிறப்புக்களைப் பெற்ற பொற்கிராமமாகும். இங்குதான் மகரிஷிகளில் ஒருவரான புலஸ்திய மாமகரிஷியின் சமாதியுள்ளது.

இக்கிராம மத்தியில்தான் திருவாசகத்தைத் தந்த மாணிக்கவாசகப் பெருமான் தவம் புரிந்து ஞானம் பெற்றார் என்பதும் உலகம் அறிந்த உண்மை. ஆதலால் இக்கிராமம் உயர்ஞான அதிர்வுகளைக் கொண்ட புண்ணிய பூமி என்பதில் ஐயமில்லை.

இங்கு வாழ்ந்து வந்த இறைபக்திமிக்க ராமன் தம்பதிகளின் மகனான காளிமுத்து எனும் பெரியார் சந்தனம்மா எனும் தம் முறைப் பெண்ணை மணந்து கொண்ட பின் ‘திரை கடலோடியும்திரவியம் தேடு” என்பதற்கிணங்க தென்னிந்திய நாட்டிலுள்ள தம் புனித கிராமத்திலிருந்து சிவபூமி எனப் புகழ்பெற்ற

*பாபச் செயல்களே நம் உயிருக்கப் பகை.*

ஈழத்தை வந்தடைந்து, ஈழத்தின் இதயம் என வர்ணிக்கப்பட்ட கண்டி மாநகரைத் தம் வசிப்பிடமாகக் கொண்டனர். இங்குதான் 26-10-1933 இல் முருகேசு சுவாமி அவதரித்தார்.

சுவாமிகளின் குடும்பம் மிகப் பணவசதிகொண்ட குடும்பமல்ல, சாதாரண நடுத்தரக் குடும்பம், சுவாமிகளுக்கு ஆறு சகோதரர்கள் இரண்டு சகோதரிகள். இப்பெரும் குடும்பத்தில் மூத்தவர் சுவாமிகளே ஆவார். பெற்றோர் இவருக்கு வைத்த பெயர் முருகேசு என்பதாகும்.

"வளரும் பயிரை முளையில் தெரியும்" என்பது போல இளமையில் கல்வித்துறையில் சுவாமிகள் மிகப் பிரகாசித்தார். துடுக்குத்தனம் குறைந்தவராக தாய் தந்தை சொல்கேட்டு நடப்பவராக சகோதர, சகோதரிகளிடத்து பாசம் நிறைந்தவராக சந்தர்ப்பம் சூழ்நிலைக்கேற்ப தம் ஆசாபாசங்களைச் சுருக்கித் தனக்கென வாழாது குடும்பத்திற்காக வாழும் ஒரு சிறந்த பிள்ளையாக பெற்றோரால் இனங்காணப்பட்டார். காலம் நகர்ந்தது. சுவாமிகள் பத்தாவது அகவையை நிறைவு செய்தார்.

இந்நிலையில் ஒருநாள் கண்டியிலுள்ள பள்ளேகல என்னும் தோட்டத்தில் அமைந்திருந்த தமது இல்லத்திற்கு அருகில் சகதோழர்களுடன் முருகேசு சுவாமி விளையாடிக் கொண்டிருந்தார்.

அவ்வேளையில் சந்நியாசி ஒருவர் வந்துள்ளார். வாட்டசாட்டமான உடல்வாகு, வசீகரமான முகம் அருள் சிந்தும் பார்வை, மொத்தத்தில் அவர் ஒரு அழகான சந்நியாசி. வந்தவர் விளையாடிக் கொண்டிருந்த பாலகன் ஸ்ரீசுவாமி அவர்களை அணுகி, "தம்பி ஒரு ரூபா தா' எனக் கேட்டுள்ளார். "என்னிடத்தில் பணம் இல்லை" எனக் கூறிவிட்டு விளையாட்டில் ஈடுபட முனைந்தார். ஆனாலும் மனம் லயிக்கவில்லை. சந்நியாசியாருக்கு ஏதேனும் கொடுக்க வேண்டும் என உள்ளம் உறுத்தியது. தனது சட்டைப் பையில் இருந்த பத்துச் சத நாணயங்கள் இரண்டை எடுத்து சந்நியாசிக்குக் கொடுத்தார்.

அதனைப் பெற்றுக் கொண்ட சந்நியாசி "நீ நன்றாக வாழ்க" என ஆசீர்வதித்துள்ளார். அவ் வேளை முருகேசு சுவாமிகள் உடலில் மின்சாரம் பாய்வது போன்ற தெய்வீக அதிர்வலைகளை உணர்ந்துள்ளார். அவ்வுணர்வின் விளைவாக விளையாட்டை நிறுத்திவிட்டு வீட்டுக்கு விரைந்து சென்ற சுவாமிகள், ஒரு ரூபாவை எடுத்துக் கொண்டு திரும்பி வந்தபோது அங்கு சந்நியாசியைக் காணவில்லை.

வியப்புடன் அந்தச் சந்நியாசியின் நினைவுடனே வீட்டுக்குச்

---

சென்றார். பின்னொரு காலத்தில் அச்சந்நியாசியை தாம் சந்திக்கப் போவதையும், அவரால் பல அனுபவங்களைப் பெறப் போவதையும் சிறுவனாகிய சுவாமிகள் அப்போது உணர்ந்திருக்கவில்லை.

சுவாமிக்குப் பதினோராவது வயது நிறைவானபோது மற்றுமொரு அனுபவம் கிடைத்தது. கண்ணையும் கருத்தையும் கவரவல்ல நுவரெலியாவில் உள்ள குதிரைப்பந்தயத் திடலில் சுவாமி இருந்தபோது முதியவர் ஒருவர் அவர் முன்தோன்றினார். அவர் சுவாமிகளை பார்த்து சுவாமிகளின் பூர்வீகப் பின்னணியைக் கூற சுவாமி வியப்பில் மூழ்கினார். பின் தன்னைப் பற்றியும் கூறிவிட்டு, "நான் மிகவும் பசியுடன் இருக்கின்றேன் பசிதீர்க்க எனக்கு ஏதாவது வாங்கித்தர முடியுமா?" எனக் கேட்டுள்ளார். உடனே சுவாமி தம்மிடமிருந்த பணத்தில் ஒரு ரொட்டியை வாங்கி அவருக்குக் கொடுத்துள்ளார்.

இச்செயல் மூலம் தமது வாழ்க்கையும், ஆத்மாவும் உயரக்கூடிய ஆசிர்வாதமொன்றைப் பெறப் போகின்றோம் என்ற உணர்வோ எதிர்பார்ப்போ சுவாமிகளிடம் இருக்கவில்லை. சாதாரணமாக ஒருவருக்கு உதவி செய்வதாகவே எண்ணினார். அந்த ரொட்டியை மகிழ்வுடன் ஏற்றுப் பசியைத் தீர்த்துக் கொண்ட முதியவர் தமது இடுப்பில் செருகியிருந்த பையை எடுத்து அதனுள் இருந்து ஒரு பழைய கிழிந்த புத்தகத்தை எடுத்தார். அது "விநாயகர் கவசம்" அந்த நூலை சுவாமிகளின் கையில் கொடுத்த அந்த நீண்ட தாடியைக் கொண்ட முதியவர் சுவாமிகளை நோக்கி "இதனைத் தினமும் பாராயணம் செய்! நீ வாழ்க்கையில் பெரும் உயர்வடைவாய்" என ஆசீர்வதித்தார்.

இவ்வாக்கினை சிரமேற்கொண்ட சுவாமிகள் அதனைப் பக்தியுடனும் சிரத்தையுடனும் பாராயணம் செய்யத் தொடங்கினார். அவ்வேளைகளில் இனம்புரியாத ஒருவித தெய்வீக ஆனந்தம் தமது உள்ளத்தில் நிறைவதை உணர்ந்து அனுபவிக்கலானார். இந்நிகழ்வு சுவாமிகளின் பிற்கால ஆன்மீகத் தாகத்துக்கும் தேடலுக்கும் வழிவகுத்தது எனக் கூறலாம். காலம் கரைந்தது. சுவாமிகளின் குடும்பத்தில் குழந்தைகள் வளர வளர பொருளாதாரப் பிரச்சனைகள் முளைவிடத் தொடங்கியது. தம் தாய் தந்தையரின் சொற்ப வருமானம் குடும்பத்தைக் கொண்டு நடத்த போதுமானதல்ல என்பதை இளவயதிலேயே புரிந்து கொண்ட சுவாமிகள் தமது படிப்பிற்கு பதினான்காவது வயதிலேயே முற்றுப்புள்ளி வைத்து விட்டார்.

---

*ஆண்டவன் அன்பு நிறைந்த உள்ளத்தில் தேனாய் இனிப்பவர்.*

திருச்சிற்றம்பலம்

# தில்லைப் பெருங்கோயிலில் தேவார விவகாரம்

**சிதம்பரம் தில்லை திருமுறைக் கழகத்தார் பொது மக்களுக்கும் விவகாரம் செய்துவரும் அன்பர்களுக்கும் அறிவிக்கும் பொது அறிக்கை.**

அறிக்கையில் அறிவிப்பதாவது, கற்று ஆங்கு எரியோம்பிக் கலியை வாராமே செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பலம் என்கிறது தேவாரம். அனைத்து உலகும் தொழும் தில்லை அம்பலம் என்கிறது திருவாசகம். சிதம்பரம் நடராசர் ஆலயம் உலக நலம் ஓங்கவும், துன்பம் நீங்கவும் உள்ளது. விண்ணவர் மண்ணவர் விரும்பி வந்து தொழக்கூடியது. சைவர்களுக்கு முதற் கோயில் இது. இக்கோயில் மனித உடல் எடுத்த அனைவருக்கும் மனித உடல் தத்துவக் கோயில். இதனால் இந்தக் கோயிலில் தீட்சிதர்கள் அன்று தொட்டு இன்றுவரை ஸ்ரீ.ஸ.பொது தீக்ஷிதர்கள் என்று எழுதி வைத்திருக்கின்றனர்.

தீட்சிதரைப் பலர் பார்ப்பனர் என்கின்றனர். இது முற்றிலும் தவறு. தீட்சிதர் பார்ப்பனர் அல்லர். அவர்கள் ஒரு தனிப்பிரிவினர். தனி இனம்; சிவனே இவர்களைத் தில்லைவாழ் அந்தணர் என்று முக்காலத்திற்கும் பொருந்தும் படி வினைத்தொகையில் கூறியிருக்கிறார். இவர்கள் ஆதிமுதல் பூசித்து வரும் இக்கோயிலில் தான் தேவாரம் ஏட்டுச் சுவடியிலிருந்து மாமன்னர் சோழர் இராசராசனால் எடுக்கப்பெற்றது. இதன் காலம் சுமார் கி.பி. 1150. இந்த காலம் முதல் தான் நாட்டில் கோயிலில் தேவாரம் பாடும் முறை ஏற்பட்டது. மன்னர்கள் காலம் முதல் எங்கு நின்று பாடவேண்டுமோ அங்கு நின்று பாடி வருகிறார்கள்.

800 ஆண்டுகளுக்கு மேலாகத் திருக்கோயில்களில் கருவறை அர்த்த மண்டபம் தாண்டி மஹா மண்டபத்தில், தேவாரம் திருவாசகம் முதலியன ஓதப்பெற்று வருகின்றன. ஏன் இந்த முறையெனில் கருவறை பதி இருக்கும் இடம். அர்த்தமண்டபம் பசு (நந்திகேசுரர்) இருக்கும் இடம். இங்கு அபிஷேகம், அர்ச்சனை செய்யவரும் பக்தர்களும் சாதி வேறுபாடு இன்றி நிற்கும் இடம். பூசாகாலங்களில் பூசகர் மட்டுமே இருக்க ஆகமம் விதி கூறுகிறது. ஒவ்வொரு கோயிலுக்கும் ஒவ்வொரு ஆகம மரபு இருக்கிறது. இதனை மீறவோ, மாற்றவோ, நீக்கவோ ஒருவருக்கும் உரிமையில்லை.

---

*நான் அல்லாத தன்மை தான் அன்பு என்பதன் பொருளாகும்.*

ஏன் நந்தி(பசு)யின் பினனிருந்து பாடுகிறோம் எனில் நமது வேண்டுகோளை வரத்தைக் கடவுளிடம் தெரிவிப்பவர் அந்த பசுவாகிய (உயிராகிய) நந்திகேசுவரர். இவரே நமது அகச்சந்தான குரு நால்வரில் முதன்மையானவர். இந்த குருவருளால் தான் அந்தக் கடவுள் திருவருளைப் பெற வேண்டும். பெற முடியும் இதன் உண்மைப்படி நந்தியின் பின் இருந்து பாடி வருகிறோம். இதுவே மரபு.

எல்லா சிவாலயங்களிலும் மூலவர் சிவலிங்க வடிவில் (அருவுருவத் தோற்றத்தில்) இருப்பர். இங்கும் ஆதி மூலஇலிங்கம், உமைய பார்வதி திரு மூலர் என்ற பெயரில் நடராசர் கோயிலுக்குள் இருக்கிறார். சிவன் மானிட உருவத் தோற்றத்தில் ஐந்தொழிலையும் அறிவிக்கும் காட்சியாக ஆனந்த நடனமாடுகிறார். அதன் சிறப்பை உணர்ந்த முன்னோர்கள் அவருக்கு ஒரு மேடை, மண், மரம் முதலிய இயற்கையைச் சார்ந்தபடி அமைத்து அதன்மேல் மூலவராக அந்த நடராசரை அமைத்தனர். நந்தி கேசுரர் உள்ளனர். மேடை ஓரம் நந்திகேசுவரர் ஆகமப்படி உள்ளதால் கீழிருந்து தான் பாடநேரிடும். ஒரு சிலர் கீழேகூடாது. மேலிருந்து தான் பாடுவேன் என நிற்பது நியதிக்குப் புறம்பானது, மன்னர்கள் காலத்திலிருந்து கீழிருந்து தான் பாடி வருகின்றனர். 6 கால பூசை நேரத்தில் இன்றும் இம்முறையில் பாடி வருகின்றனர்.

கோயில் மரபை மீறுவது, மாற்றுவது, நீக்குவது எல்லோருக்கும் இனிமை தருவன அல்ல. இன்னல்தரும். விண்ணைக் குத்திக் கை நோவும் கதையாக வீண்விவாதம் செய்வது விவேகமல்ல. புனிதமான மேடைமீது ஆசாரபக்தியுடன் ஏறி சாதி வேறுபாடின்றி யாரும் வழிபடலாம். வீண் விவாதம் புரிவது வேதனையைத் தருகிறது. இதுவன்றி ஒற்றுமை இல்லாமல் சாதிச் சண்டையைத் தூண்டுவதாக உள்ளது.

கோயில் இரகசியத்தை ஒளி காட்டி வெளிப்படுத்துவது போல் ஏதேனும் உள் நோக்கம் இருந்தால் அதை உலகோருக்கு வெளிப்படுத்தி விடுவது விவேகம் என்று தோன்றுகிறது. “ஆயிரம் உண்டு இங்கு சாதி அன்னியர் வந்து புகல் என்ன நீதி” “ஒன்று பட்டால் உண்டு வாழ்வு” என்ற மீசை முண்டாசுக்காரன் மொழிக்கும் பெருமை முதல் இடம் தருவோம்.

சிவதீட்சை பெற்றோர், திருமணம் செய்து கொண்டோர் இவர்களே பூசைக்கும், தேவாரம் ஓதுதற்கும் உரிமை பெற்றவர்,

---

ஆகமவிதி மாறல், பூசை நியதி மீறல், இருந்தால் நாட்டில் நோய்மிகும். மன்னர் ஏதும் செய்ய முடியாமல் தயங்குவர், மழை பெய்யாது என்பது திருமூலர் திருமந்திரம், உண்மை, நியாயம், நேர்மை மரபுகள் இவற்றை காத்து வாழ உங்களை வேண்டிக்கொள்கிறேன்.

"நன்மை கடைப்பிடி தீவினையகற்று".



திருச்சிற்றம்பலம்

திருமுறைக் கலைஞர் சித்தாந்தப்புலவர்
வித்துவான் ச. சுந்தரேசம்பிள்ளை
தலைவர்
திருமுறைக் கழகம்


**FASHION FLORIST INC.**

**பாஷன் பூக்களஞ்சியம்**

**பாபுவின் கைவண்ணத்தில்**
**பூக்கள் மாலையாகின்றன**


**416-754-8282**


**4400 Sheppard Ave. East, Unit 5**
**Scarborough, ON.**

# சிவனொளிபாதமலை

இளைப்பாறிய ஆசிரியர் செ. சந்திரசேகரி

உலகில், நான்கு சமயங்கள் சேர்ந்து வழிபடும் ஒரு இடமாக சிறப்புப் பெற்று இருப்பது சிவனொளிபாதமலையொன்றே. மலையுச்சியில் காணப்படும் பாத அடையாளம் சிவனது பாதமென இந்து சமையத்தவரும், புத்தரின் பாதமென பௌத்தர்களும், செயின் தோமஸின் பாதமென கிருஸ்தவர்களும், அல்லாவின் பாதமென முஸ்லிம்களும் கூறுகின்றனர்.

வைகாசி மாதம் 1954 ஆம் ஆண்டு, நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியில் நான், ஆசிரியராக இருக்கும்போது, ஆத்மஜோதி முத்தையா அவர்கள் தலைமையில் 35 மாணவர்கள் அடங்கிய குழுவுடன் சேர்ந்து, நாவலப்பிட்டி கதிரேசன் கோயிலிலிருந்து ஆரம்பமாகி, சிவனொளி பாதமலைக்கு கினிகத்தனை, மஸ்கேலியா ஆகிய இடங்களுக்கூடாக ஏறக்குறைய 35 மைல் தூரம் பாதயாத்திரை ஒன்றினை மேற்கொண்டோம். இது தொண்டர்கள் பஜனை பாடிச் செல்லும் யாத்திரையாக அமைந்தது. இதன் அனுபவத்தை இங்கு குறிப்பிடுவதில் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.



கூடுதலாக இம்மலை, கடல் மட்டத்திலிருந்து 7360 அடி உயரமாகவுள்ளது. இலங்கை அன்னியர் ஆட்சியில் இருந்தபோது, 1840 ஆம் ஆண்டு, பிரபலமான பொறியியலாளர் மேஜர் ஸ்கின்னர் என்பவர், இப்பகுதியில் தற்காலிகமாகத் தங்கி இருந்தவேளை கதிரவன் உதிக்கின்ற காட்சியின்போது, மலைச்சாரலின் நிழலானது தனது மனதை மிகவும் கவர்ந்ததாகத் தனது (Fifty years in Ceylon) என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மலை அடிவாரத்திலிருந்து 16 மைல் நடை பாதையில் அல்லது கூட்டாக, 9 மைல் வாகன மூலமும் 7 மைல் நடந்தும் மலையுச்சியினை அடைய முடியும். மலையுச்சியை அடைய

---

*சுகம் வந்தாலும் துன்பம் வந்தாலும் மனம் கலங்காமல் இருப்பவரே சான்றோர் ஆவர்*

ஏறக்குறைய 9 மணித்தியாலம் எடுக்கும். 11ஆம் நூற்றாண்டிலிருந்து யாத்திரை செய்பவர்களின் இடமாக இம்மலை இருந்தபோதிலும், மார்கழி மாதத்தின் முழுநிலா போயாத் தினத்திலிருந்து, வைகாசி விசாகத்தினம்வரை யாத்திரைக்குரிய காலமாகக் கருதப்பட்டு வந்தது. ஏனைய காலங்களில் மழைபெய்வதால் பாதை போக்குவரவுக்கு ஏற்றதாக இருக்காது. ஒவ்வொரு வருடமும், பல ஆயிரக்கணக்கான மக்கள் மலையேறி வருவதைப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. மலைச்சாரலை தொடர்மலைகளில் இருந்து ஒரு ஆறு பிரிக்கின்றது. பக்தர்கள் தங்களைச் சுத்திகரிப்பதற்கு ஆற்றில் நீராடி வெள்ளையாடை அணிந்து செல்வதைக் காணக்கூடியதாக இருந்தது. போதிய மின்சார வெளிச்சம் இருப்பதால் மக்கள் இரவு நேரங்களில் செல்வார்கள். பக்தர்கள், சாது சாது என்ற கோசத்தோடு செல்வார்கள், அதோடு மேலே போகும் எங்களையும் வரவேற்பார்கள். பாதையின் வழியே, தங்கு மடங்கள் உண்டு. பாதை வழியே, அநேக முனைகளில் தங்கிச் சமையல் செய்து, உணவு பரிமாறி பக்தர்கள் செல்வார்கள். இடைநேர உணவுகள் கிடைக்கக் கூடியதாகவும் இருக்கும். சிலர் இரவில் அங்கு தங்கிச் செல்வதும் உண்டு. பக்தர்கள் பாதை வழியில் காணப்படும் மரமொன்றில் கொளுக்கியோடு சேர்ந்த நூல்களைக் கொளுவிச் செல்வாகள். இந்த இடத்தை, புத்தபிரான் தங்கிச் சென்ற இடமென மக்கள் கருதுகின்றனர்.



எமது குழுவினர் மலையுச்சியை அடைந்தவேளை, மிகக் குளிராகவே இருந்தது. எமது இறுதி அடியை சிவனொளிபாதலை உச்சியில் வைக்கும்போது எமது குறிக்கோள் நிறைவு பெற்றதே என்ற எண்ணம் எல்லோருக்கும் உதயமானது. நேரம் காலை 5:00 மணி அதிகாலை. சூரியன் உதயமாகும் வேளையை எதிர்பார்த்துக் கொண்டேயிருந்ததால் நேரம் செல்வது தெரியவில்லை. காலை 5:30 மணி, கதிரவன்சிறிது சிறிதாக வெளிக்கிளம்புவது அனைவரையும் மெய்மறக்கச் செய்தது. குன்றிலிருந்து கிளம்பும் காற்று, எரிமலையல்ல, நீர்வீழ்ச்சிக்கான

---

*இறையருள் இருந்தால் மிகப் பெரிய செயலைக்கூட இலகுவாக முடித்து விடலாம்.*

இன்பம் தரும் அந்த அழகிய அருவி, இடமானது பாலைவனமல்ல சோலைவளம் நிறைந்தது, என்னென்ன இயற்கை எழில் அங்கே காணப்படுகிறது. எம்மனதைக் கொள்ளை கொண்டது. சூரியன் உதயமானதும் மணியோசைச் சத்தம் கணீர் கணீர் எனக் கேட்டது. வெண்ணிறத் துணியொன்றினை பாதச்சின்னத்தில் வைத்து, சிவனை நினைந்து வணங்கினோம். பூசை நடைபெற்றது. சில மணிநேரம் ஓய்வெடுத்த பின்னர், திரும்பி நாம் அடிப்பாதைவழியே கீழ்நோக்கிச் சென்றோம். கீழே செல்லும்போது ஒருவித சோர்வும் எங்களுக்கு இருக்கவில்லை. அன்றிரவு நண்பர் ஒருவர் இல்லத்தில் தங்கி, மறுநாள் நாவலப்பிட்டி திரும்பினோம். இது ஓர் மறக்கமுடியாத புனித யாத்திரை.

(இக்கட்டுரை, 1954ஆம் ஆண்டு, நாவலப்பிட்டி இந்து மாமன்ற ஆண்டுவிழா மலரில் இடம்பெற்றது. இப்போது சில திருத்தங்களுடன் இதனைத் தருகின்றேன்.)


**Dr. Shan A. Shanmugavadivel & Associates**

**டாக்டர் அ. சண்முகவடிவேல்**

**Orthodontics Implants**

பற்களுக்கு கிளிப் போடுவதிலும் Implant பல் கட்டுவதிலும் பயிற்சி பெற்றவர்

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario, M1K 5J8**
**Monday to Saturday**
Near Kennedy Subway (Rainbow Village Building)

**416-266-5161**

**MAIN SQUARE DENTAL OFFICE**

**7-2575 Danforth Avenue, Toronto, ON. M4C 1L5**
Mon, Tues, Wed, Thurs, Fri, Sat & Sun - Near Main Subway
Dr. Shan - Thusday (Morning)
Dr. Yao San (Tue, Fri & Sat)
Dr. Brian (Monday) Dr. May (Wednesday)

**416-690-0121**

# திருமுறை மாநாடு - 2007
# இரண்டாம் நாள் நிகழ்வுகள்

## புதுவை இராமன்

யூலை மாதம் 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருமுறை மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் அனைத்தும் கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் ரிச்மர்ண்ட ஹில் ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய திருமண மண்டபக் கலையரங்கில் ஆலய அறங்காவலர் சபைப் பொருளாளர் சைவப்பெரியார் திரு நா. சிவலிங்கம் அவர்கள் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

விடுமுறை தினமாக அமைந்த ஞாயிற்றுக்கிழமை என்பதால், ஆலயத்தில் எண்ணற்ற பக்தர்களும், இந்து சமயப் பேரவை உறுப்பினர்களும் திரண்டிருக்க ஸ்ரீ விநாயக பெருமானுக்கு விசேட அபிசேக ஆராதனை வழிபாடுகள் செய்யப்பட்டன.

திருமுறை மாநாட்டின் மரபினையொட்டி, திருமுறைகளை இந்து சமயப் பேரவைத் திருக்கூட்ட உறுப்பினர்கள் தலையில் சுமந்தபடி, ஆலய வீதிவலம் வந்து, அரங்க மேடையில் வைத்து திருமுறை வழிபாடு நடத்தினர்.

காலை 9.00 மணிக்கு 2ம் நாள் மாநாட்டு வைபவம் திருமதி நாகேஸ்வரி கணேஸ் அவர்களின் தேவாரப் பண்ணிசையுடனும், செல்வி அனோஜினி குமாரதாசனின் தமிழ்மொழி வாழ்த்துடனும் நடைபெற்று, தாயகத்தில் உயிரிழந்தவர்களுக்கான அமைதி வணக்கம் செலுத்தி முடிந்ததும், இந்து சமயப் பேரவை செயலாளர் திருமுறைச் செல்வர் சிவ.முத்துலிங்கம் அவர்கள் அனைவரையும் வரவேற்று, இரண்டாம் நாள் நிகழ்ச்சியைப்பற்றி முன்னுரை வழங்கிச் சிறப்பித்தார்.

அடுத்து ஆலயத்தின் பிரதான சிவாச்சாரியார் சிவத்திரு கேதீஸ்வரக் குருக்கள் மற்றும் தொழிலதிபர் திரு இ.இராஜதுரை ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்கி, இந்து சமயப் பேரவை ஆற்றிவரும் சைவ சமயப் பணிகளின் சிறப்புகளையும், இளைய சமுதாயம் இதன் பயன்களை அறிந்து, தமிழையும், இந்து சமயம் காட்டும் வாழ்வியல் நெறிகளை கற்றறிந்து உயர வேண்டியதின் அவசியத்தை தங்களது வாழ்த்துரையில் வெளிப்படுத்தினார்கள்.

---

*சிவம் என்ற சொல்லுக்குத் துன்பத்தை நீக்கி இன்பத்தை அளிப்பவர் என்பது பொருள்.*

தலைமையுரை ஆற்றிய சைவப்பெரியார் திரு நா.சிவலிங்கம அவர்கள் திருமுறைகள் என்பன எவ்வாறு சிவபெருமானின் பெருமையை உணர்த்தும் வகையில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சிவன் அருள் பெற்ற அருளாளர்களால் பாடப்பட்டவை என்பதை விவரித்தார். இந்து சமயப் பேரவை கடந்த 13 ஆண்டுகளாக சைவ சமயத்தினையும், எட்டு ஆண்டுகளாக திருமுறை முற்றோதல்களையும் மிகவும் புனிதமாக செயல்ப்படுத்தி, புலம் பெயர்ந்து வாழும் தமிழ் சமூகங்களின் மனதில் நிறைந்துள்ள கவலைகளை மறக்கச்செய்து, சிவ வழிபாட்டின் சிறப்பிற்கு நம்மை எல்லாம் உட்படுத்தும் அரும் பணி என்பது மிகவும் பாராட்டுதலுக்குரியது என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து சிறப்புரை ஆற்றிய இந்து சமயப் பேரவை உறுப்பினர்களான டாக்டர் இ. இலம்போதரன் அவர்கள் திருமுறையும் வாழ்வியில் தத்துவமும் என்ற தலைப்பிலும், அன்புநெறி ஆசிரியர் திருமதி வடிவழகாம்பாள் விசுவலிங்கம் "12ம் திருமுறை திருத்தொண்டர் புராணம்" என்ற தலைப்பிலும், சைவ சித்தாந்த கலாநிதி திரு க.கணேசலிங்கம அவர்கள் ஊரன் என் உறவினன் என்ற தலைப்பிலும் சிறப்புரைகள் ஆற்றினர். உண்மையிலேயே அவர்களின் உரை அனைத்துமே கேட்ட அனைவரின் மனதில் பதியும்படி, பலவித மேற்கோள்களையும், சமயக்குரவர்களின் தத்துவங்களையும், திருவள்ளுவர் காட்டிய வாழ்வியல் நெறிகளையும், பிற சமயங்களில் காணப்படும் தெய்வ நம்பிக்கைகளின் ஒற்றுமையையும், நமது வேதாந்தக் கருத்துக்களை மையப்படுத்தி, இந்து சமயத்தில் உள்ள ஈடு இணையற்ற ஆன்மீகக் கருத்துக்களாக அவர்களின் சொல்லாற்றாலாலும், எளிய தமிழ் நடையிலும் அனைவரையும் கவரும்படி அமைந்து பெரும் பாராட்டுதல்களைப் பெற்றது என்பதுதான் பெருமைக்குரியதாகும்.

அன்றைய விழாவின் சிறப்பே அன்று தமிழர் தகவல் பிரதம ஆசிரியர் திரு திருச்செல்வம் அவர்களால் வெளியிடப்பட்ட கவிநாயகர் திரு கந்தவனம் அவர்களின் ஆன்மீகக் கவிதைகள்' எனும் நூலும், திருமுறை முற்றோதலில் பங்கு பற்றிய அடியார்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்ததும், அதற்கும் மேலாக அன்று மாலை நடைபெற்ற சைவத்தையும் தமிழையும் கனடாவில் மிகவும் இறையுணர்வோடு வளர்த்து பெரும்

---

*நல்லவர்களின் நட்பாலும் திருமுறைப்பாராயணத்தாலும் நல்லறிவைப் பெறலாம்.*

தொண்டாற்றும் ஆறு ஆன்மீகப் பெரியோர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவித்ததை பாராட்டதவர்களே இல்லை எனலாம்.

மதியம் 2.00 மணியளவில் உணவு அருந்தி, சிறிது ஓய்விற்குப்பின் பிற்பகல் நிகழ்ச்சிகள் ஆகம சித்தாந்த வித்தகரும், ஸ்காபரோ -கென்னடி-பின்ச் அருகில் உள்ள ஸ்ரீ வரசித்தி விநாயக ஆலய பிரதம சிவாச்சாரியார் கலாநிதி சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்கள் தலைமையில் தொடங்கின.

- தொடரும்


# ஆத்மஜோதி பத்திரிகை மணிவிழா

**காலம்:**


**19-07-2008 சனிக்கிழமை, பிற்பகல் 2:00 மணி தொடக்கம் இரவு 9:00 மணி**

**இடம்:**

கனடா கந்தசுவாமி கோயில்

**733 Birchmount Road, Scarborough**

**பட்டிமன்றம், கவியரங்கம், கருத்துக்களம், சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும் மணிவிழா சிறப்பு மலர் வெளியிடப்படும்**



**ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களால் எழுதப்பட்ட 'மாணவர்களுக்கான மாண்புறு கதைகள்' என்ற நூலும் வெளியிடப்படும்**


*நமது வினைகளை அழிக்கும் படைக்கலமாக உள்ளவை பன்னிரு திருமுறைகள்.*

# இந்து சமயப் பேரவைச் செய்திகள்

## மகாசிவராத்திரியை முன்னிட்டு திருவாசகம் முற்றோதல்

அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் மகா சிவராத்திரியை முன்னிட்டு 05-03-2008 புதன்கிழமை பேரவையின் திருக்கூட்டத் தினரால் திருவாசகம் முற்றோதல் நடத்தப்பட்டது. இரவு முழுவதும் துயில் கொள்ளாமல் அடியார்கள் திருவாசகம் முற்றோதலில் பங்கு கொண்டனர். ஒவ்வொரு சாமப் பூசைக்கும் அபிடேகம் செய்யும் பொழுது திருக்கூட்டத்தினரால் சிவநாம சங்கீர்த்தனம் நிகழ்த்தப்பட்டது. பேரவையின் தலைவர் சைவதுரந்தரர் வி. கந்தவனம், கலாநிதி நா. சுப்பிரமணியன் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றினர்.

## திருப்புகழ் பூர்த்தி விழா

பேரவையின் திருக்கூட்டத்தினரால் கடந்த மூன்று மாத காலம் வாரம் தோறும் பிரதிச் சனிக்கிழமைகளில் நிகழ்த்தப்பட்ட அருணகிரிநாதர் சுவாமிகளின் திருப்புகழ் முற்றோதலைத் தொடர்ந்து 15-03-2008 சனிக்கிழமை திருப்புகழ் விழா சிறப்பாக நடத்தப்பட்டது. மேற்படி விழாவிற்கு பேரவையின் தலைவர் திரு. வி. கந்தவனம் தலைமை தாங்கினார். திருப்புகழ் முற்றோதிய அடியார்களுக்கு மத்தியில் நடத்திய திருப்புகழ் மனனப் போட்டியில் பரிசு பெற்றவர் களுக்கும் முற்றோதலில் பங்கு பற்றிய திருக்கூட்டத்தினருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. விசேட அபிசேக ஆராதனைகளும் இடம்பெற்றன. பேரறிஞர் முருகவே பரமநாதன் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

## குடைச்சுவாமியின் குருபூசை

15-10-2008 சனிக்கிழமை குடைச்சுவாமியின் குருபூசை பேரவையின் திருக்கூட்டத்தினரால் நடத்தப்பட்டது. குருபூசையை முன்னிட்டு விசேட திருமுறைப் பசனையும், வழிபாடும் இடம்பெற்றது. விசேட அன்னதானமும் சந்நிதானத்தில் எழுந்தருளியிருக்கும் கைலாய நாதப் பெருமானுக்கு விசேட அபிசேக ஆராதனையும் இடம்பெற்றது. குடைச்சுவாமிகளின் அருட்செயலைப் பற்றி சிவ முத்துலிங்கம் சிறப்புரை ஆற்றினார்.

---

*பார்க்கும் பொருள்களில் எல்லாம் பரம்பொருளைக் காண்பது சிவயோகம் ஆகும்.*

திருப்புகழ் முற்றோதலிலும், மனனப் போட்டியிலும் பங்குபற்றிய திருக்கூட்ட அடியார்கள் பரிசு பெறும் காட்சி













## சிவயோக சுவாமிகளின் வருடாந்தக் குருபூசையை முன்னிட்டு 10ஆவது வருடமாக நற்சிந்தனை முற்றோதல்

சிவயோக சுவாமியின் மகா குருபூசையை முன்னிட்டு பேரவையினரால் 10ஆவது வருடமாக நற்சிந்தனை முற்றோதல் 22-03-2008 சனிக்கிழமை நடத்தப்பட்டது. திருக்கூட்ட அடியார்களும் சுவாமிகளின் பக்தர்களும் பக்தி சிரத்தையுடன் கலந்து கொண்டனர். காலை 7 மணிக்குத் தொடங்கிய முற்றோதல் நிகழ்வு இரவு 9 மணிக்கு நிறைவுற்றது. இரவு நிறைவுறும் பொழுதும் 38 அடியார்கள் பக்தியுடன் கலந்து கொண்டது, சிவயோகசுவாமிகளின் அருளாட்சியை தெளிவுபடுத்தியது. விசேட அபிசேக ஆராதனையும் அன்னதானமும் இடம்பெற்றன.

---

**ஞானம்**

ஆன்மீகம் மனிதத்தின் விழுமிய பயன். ஆன்மீகத்தின் மறுபெயர்தான் மனித நேயம்.. ஆன்மீகம் ஆன்மநேய ஒருமைப்பாடுடையது. ஆன்மீகம் பகுத்தறிவுக்குப் புறம்பானதல்ல. - குன்றக்குடி அடிகள்


# S & S Engravers

**வெற்றிக் கேடயங்கள், பெயர்க்கோர்வைகள், வாழ்த்து மடல்கள், அனைத்தும் உங்கள் தேவைககேற்ப**

**குறைந்த விலையில்**

Name plate, Plaques, Awards, Directional Signs, Logos, Donor Recognition, Systems & Panels,




**285 Progress Ave. #08**
**Scarborough, Ont.**
**Tel: 416-335-6819, Cell: 416-875-3500**

# 2010 லிருந்து 2160வரை உலகை இந்திய சித்தர்கள் வழிநடத்துவார்கள்

டாக்டர் இ. இலம்போதரன்

சோதிடம் வானியல் சார்ந்த ஓர் உன்னதக் கலையாகும். மானிடரின் வாழ்க்கைப் பாதையை வளப்படுத்தும் வாழ்வியல் வழிகாட்டியாகும். வேதத்தின் அங்கங்களுள் சோதிடம் வேதத்தின் கண்ணாகப் போற்றப்படுகிறது.

சோதிட சாத்திரப்படி ஒவ்வொரு தமிழ் ஆங்கிலப் புத்தாண்டு பிறப்பின்போதும் இயற்கைச் சீற்றங்கள் பற்றியும் அதனால் பேரழிவுகள் நிகழ வாய்ப்புகள் உண்டாகும் என்பதையும் ஆராய்வது மரபாகும்.

சாத்திரப்படி அமாவாசை, பௌர்ணமி கிரகணங்கள் தோன்றும் நிலை, கிரகங்களின் சுழற்சிப் பாதையில் அதன் மாறுதல்கள், முக்கிய கிரகங்களான சனி, குரு, ராகு, கேது, செவ்வாய் ஆகியவற்றின் சஞ்சாரத்தில் உண்டாகும் நேர்த்தி வக்கரகதி ஆகியவற்றையும் மூன்று மாதகாலத்திற்கு ஒருமுறை சூரியனின் ராசிப்பிரவேச நிலைகளையும் கணக்கில் கொண்டு ஒரு நாட்டிற்கு ஏற்படவிருக்கும் இயற்கைச் சீற்றங்களை ஆராய்வது மேதினிய சோதிடம் அல்லது நாட்டு நடப்பு சோதிடம் என்று அழைக்கப்படும். சூரியனும் சந்திரனும் ஒளிதரும் கிரகங்கள் ஆகும். செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி ஆகியவை ஒளிச்சிதறல் கிரகங்கள் ஆகும்.

இந்த 2008 வருடப்பிறப்பன்று செவ்வாய் (நெருப்பு கிரகம்) காற்றுத் தத்துவ ராசியான மிதுன ராசியில் உலவுகிறது. சுமார் 224 நாட்களாக தங்கியுள்ளது. இது செவ்வாய்க் கிரக சஞ்சாரத்தில் உண்டான அதிரடி மாறுதல்கள் ஆகும். கொடும் ஆக்கிரமிப்புத்திறன் கொண்ட செவ்வாய் சாதாரணமாக ஒரு ராசியில் 45 நாட்களுக்கு மேல் இருப்பதில்லை. ஆனால், வழக்கத்திற்கு மாறாக இந்தச் சஞ்சாரம் உண்மையிலேயே பற்பல சோதனைகளை தோற்றுவிக்கும் என்பது கடந்தகால நிகழ்வுகள் மூலம் கிடைக்கும் அனுபவம் ஆகும். சுமார் 80 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் உபய ராசியான மிதுனத்தில் செவ்வாய் தங்கியுள்ளது.

2-09-1928-ல் மிதுன ராசிக்கு செவ்வாய் வந்து சுமார் 224 நாட்கள் தங்கியிருந்தபோது அப்போதைய காலச்சுவட்டைப் புரட்டிப்

---

*நல்ல மனச் சாட்சி தான் கடவுளின் குரல்.*

பார்த்தால் முதலாம் உலகப்போர் முடிவடைந்த நிலையில், பலம் மிகுந்த மேற்கத்திய நாடுகள் பலவும் இடம்மாறி பலத்தன்மையில் இடைவெளி ஏற்பட்ட நிலையில் இருந்தன. பேராற்றல் கொண்ட இயற்கைச் சீரழிவைக் காட்டிலும், போரில் உபயோகப்படுத்தப்பட்ட அழிவுச் சாதனங்கள் மனித சமுதாயத்தின் வேரான அமைதியைப் பெருமளவில் பாதித்திருந்தது. தவிரவும் புதிய நோய்கள் ஏற்பட்டு, மனித குலத்தை அடியோடு சாய்த்துவிடுமோ என்ற அளவிற்கு காலச்சூழல் இருந்திருக்கின்றது.

2008ஆம் ஆண்டுப் பிறப்பன்று கும்ப ராசியில் ராகுவும், சிம்ம ராசியில் கேதுவும் சனியுடன் சேர்ந்து சஞ்சாரம் செய்கிறது. சிம்ம ராசியில் மகம் நட்சத்திரத்தில் சனியின் சஞ்சாரம் நாட்டுக்கு நல்லது செய்யாது தீமையே விளையும் எனப் பழம்பெரும் நூல்களில் சான்றுகள் காணப்படுகின்றன.

“பிருஹத் ஸம்ஹிதை”, “நாரத ஸம்ஹிதை”, “குமார சுவாமீயம்’’, ‘‘ஜாதக அலங்காரம்’’ போன்ற மேதினீய விதிமுறைகளை, அதாவது இயற்கைச் சீற்றங்களைப் பற்றி விவரிக்கின்ற விடயங்களை நாம் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

குறிப்பாக “குமார சுவாமீயம்” எனும் பழம்பெரும் ஜோதிட நூலில் “உபய” ராசியான மிதுன ராசியில் (காற்று ராசி) நெருப்புக் கிரகமான செவ்வாய் நீண்ட காலம் தங்குவதால் அதிக உயிர்ச்சேதம், புயல், வெள்ளம், பூகம்பத்தால் பேரழிவுகள் விளையும் என்ற குறிப்புக் காணப்படுகிறது.

அடுத்து மற்றொரு பிரபல சோதிட கிரந்தமான “சாதக அலங்காரம்” எனும் நூலில், “சிம்ம” ராசியில் மக நட்சத்திரத்தில் கேதுவுடன் சனி உலவுவது நாட்டு மக்களுக்கும் நாடாளும் இராசாக்களுக்கும் கெடுதல் விளைவிக்கும். பஞ்சம், பசி, பட்டினி, மக்கள் செத்துமடிதல் ஆகியன ஏற்படும் என்ற குறிப்பு உள்ளது.

மேலும் மில்லினியம் பிறப்பு (1.1.1900) சாதகப்படியும் இந்திய சுதந்திர தின சாதகப்படியும் (15.08.1947, 12.01.42மணி) 2008ஆம் ஆண்டுப் பிறப்பில் இயற்கைப் பேரழிவுகள் உண்டு என்பதை அறிய முடிகிறது. காலச்சக்கரத்தில் யுரேனஸ் கிரகம் கும்ப ராசியிலும், செவ்வாய் மிதுனத்திலும், சனி சிம்ம ராசியிலும் சஞ்சாரம் செய்யும் நிலையே, காலப்பரிமாணத்தில் இயற்கையில் ஏற்படக்கூடிய மிகத் தீவிரமான போக்குகளை காட்டி எச்சரிக்கின்றன.

---

*எண்ணங்கள் போலவே வாழ்வு அமைகிறது.*

இந்த ஆண்டு மேதினிய சாதகப்படி 21.04.2008 முதல் 30.04.2008 ஆம் தேதிக்குள் மஹாபிரளயம் (நீர்ப்பிரளயம்) ஏற்பட வாய்ப்புகள் அதிகம் உண்டு.

சாத்திரப்படி பிரளயங்களில் ஐந்து வகை உண்டு.

1. நீர்ப்பிரளயம் - ஆறு, கடல் சீற்றத்தால் உண்டாவது.
2. நிலப்பிரளயம் - (பூகம்பம்) நிலநடுக்கத்தால் உண்டாவது.
3. வளி (வாயுப்பிரளயம்) - புயல் சூறாவளிக் காற்று இவற்றால் உண்டாவது.
4. அக்கினிப்பிரளயம் - எரிமலை வெடிப்பு, காட்டுத்தீ முதலியவற்றால் உண்டாவது.
5. ஆகாயப் பிரளயம் - பெருமழை, பனிமழை, எரிநட்சத்திரம் அல்லது கிரகங்களின் மோதலால் உண்டாவது.

இந்தியாவில் ஏற்பட்ட "கட்ச்" பூகம்பம் நிலப்பிரளயம் ஆகும். 26.12.2004ல் ஏற்பட்ட சுனாமி நீர்ப்பிரளயம் ஆகும். இப்படி பிரளயங்கள் ஏற்படுவதற்குக் காரணம் யுரேனஸ், சனி, செவ்வாய் ஆகிய கிரகங்களே.

இந்தோனேசியாவில் உள்ள சுமாத்திரா தீவில்தான் 26.12.2004 அன்று பூமி அதிர்ச்சி ரிக்டர் அளவில் 9 புள்ளிகள் ஏற்பட்டது. இந்த அளவுக்கு கடுமையான நில அதிர்ச்சி ஏற்படக் காரணம் சுமாத்திரா தீவு நெருப்பு வலையத்திற்குள் இருப்பதுதான். இது கண்ணுக்குத் தெரியும் வலையம் அல்ல. கடல் நீருக்கு அடியில் அதற்கும் கீழே பூமிக்கு அடியில் உள்ள நெருப்பு வலையம் ஆகும். திருமூலர் "திருமந்திரம்" எனும் நூலில் கூறும் கடலுக்குள் நெருப்பு இருக்கிறது என்பதன் தத்துவப்பொருளும் இதுவேயாகும். கடந்த சுனாமி நிகழ்வுதான் ஆன்மீக ஆராய்ச்சி யாளர்களுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

உலகில் நடக்கப்போகும் சம்பவங்களை 400 வருடங்களுக்கு முன்பே சில மறைமுகக் குறியீடுகளால் எழுதி வைத்து விட்டுப்போன தீர்க்கதரிசி நாஷ்டர் டாம் உலக அழிவிற்கான அறிகுறிகளைக் குறிப்பிட்டுள்ளார்.

2010 - க்குப் பிறகு உலக அளவில் பூகோள மாறுதல் ஏற்படும். அப்போது இந்தியா குபேர தேசமாக மாறும். உலகம் முழுவதும் அழிவுகள் ஏற்பட்டாலும், இந்தியா முழுவதுமாக அழிந்துவிடாது. அதன்பிறகு 150 ஆண்டுகளுக்கு இந்தியா உலகை

---

*ஆழ்ந்த வழிபாட்டினை ஆண்டவன் ஏற்கிறார்.*

வழிநடத்திச் செல்லும். காகிதப் பணம் அழிந்து மீண்டும் தங்க நாணயங்கள் புழக்கத்திற்கு வரும். ஆன்மீகம், கலாச்சாரம், பண்பாடு எல்லாவற்றையும் வெளிநாட்டவர்கள் நம் நாட்டுக்கு வந்து பணம் கொடுத்துக் கற்றுச் செல்வார்கள். இந்த மண்ணில் அப்போது சித்தர்கள் பொற்கால ஆட்சி நடத்துவார்கள் என்று சித்தர்கள் அருளிச் செய்த ஓலைச் சுவடி குறிப்புகளில் காணப்படுகின்றன. 1896-ஆம் ஆண்டு ஒரு சுனாமி அலை யப்பானைத் தாக்கியது இந்த அலையின் உயரம் 160 அடி.

1988-ஆம் ஆண்டு அலாஸ்காவில் (அமெரிக்கா) ஒரு சுனாமி அலை தாக்கியது. இந்த அலையின் உயரம் 160 அடி.

தமிழ்நாட்டை 26.12.2004 அன்று தாக்கிய சுனாமி அலையின் உயரம் 160 அடியாக இருந்திருந்தால் இந்நேரம் பாதித் தமிழ்நாடு கடலுக்கு அடியில் போயிருக்கும்.

எனவே சனி, செவ்வாய், யுரேனஸ், ராகு-கேது ஆகிய கிரகங்களின் சுழற்சிப் பாதையில் ஏற்படுகிற அதிரடி மாறுதல்களால் மீண்டும் இராட்சதப் பேரலைகள் பெருங்கடலில் உருவாகி, மனித சமுதாயத்தை அழிக்கும் வண்ணம் உருவெடுக்க வாய்ப்புகள் உண்டு.

அதாவது இந்தோனேசியாவில் மீண்டும் பூகம்பம் 60 கி.மீ ஆழத்தில் மையம் கொண்டு குலுங்குவதும், சுமாத்திரா தீவு மற்றும் இலங்கை, தமிழகக் கடற்கரை, அந்தமான், நிக்கோபார் ஆகிய இடங்களில் உயிர்ச்சேதங்கள் நீர் பிரளயத்தால்(சுனாமி) ஏற்பட வாய்ப்புகள் உண்டு. நாகை, வேதாரண்யம், கன்னியாகுமரி, கேரளக் கடற்கரைப் பகுதிகளிலும் கடல் கொந்தளிப்பும் சேதாரங்களும் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உண்டு.

நீர், நிலம், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களை நாம் பயன்படுத்தலாம். ஆனால் அவற்றை அழிக்க முடியாது. அதனால்தான் இயற்கைச் சக்திகளைப் படைத்த ஒருவர் இருக்கிறார். அவரே கடவுள் என்ற நம்பிக்கை நம்மிடையே அசைக்க முடியாமல் நிலவுகிறது. அந்த நம்பிக்கையில்தான் மனித இனம் நாளை வரப்போவதை எண்ணிக் கலங்காமல் வாழ உதவுகிறது.

கருணைக்கடலான இறைவன் துன்பங்களிலிருந்து நம்மைக் காப்பான் என்று நம்புவோம்.

---

*சுயநலம் அல்லது தன் முனைப்பு அற்ற நிலையே அன்பு எனப்படும்.*

உ

சிவாயநம

# சிதம்பரத்தில் இந்து சமயப் பேரவை அடியார்கள்

இ. செல்லையா
05-03-2008
சென்னை- 80

**ஒரு செய்திக் கட்டுரை – கனடா (வட அமெரிக்கா) நாடு துரந்தை நகர் – ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை –செயலர், பொருளாளர் மற்றும் சில உறுப்பினர்கள் நமது செந்தமிழ்நாட்டில் – சிவபெருமானின் திருக்கோயில்களில் 15–11–2007 முதல் 9–12–2007 வரை நடத்திய – 'பன்னிரு திருமுறை முற்றோதுதலும் பெரியபுராண விழா எடுத்தலும்'.**

மெய்யன்பர்களே!

அண்மையில் நடைபெற்ற மேற்கண்ட விழாவில் கலந்து கொண்டு யான் பெற்ற இன்பத்தினை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.


நமது தமிழ்நாட்டில் தற்காலத்தில், திருமுறைகளை முற்றும் ஓதுதல், இல்லச் சடங்குகளைத் திருமுறைகளை ஓதி நடத்துதல், கோயில்களில் வழிபாட்டுக் காலங்களில் - கூட்டாகத் திருமுறைகளை ஓதி வழிபாடு செய்தல் முதலியன நடை முறைக்கு வந்துள்ளன.

மேலும் நம் தமிழகத்தின் சிறந்த சைவ ஆதீனங்களில் ஒன்றான, திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் சிவபெருமானின் பேரருள் திறத்தால், சிவநெறிச் சிந்தனையை விரித்துரைப்போர், எழுதுவோர், திருமுறைகளைப் பண்ணோடு பாடுவதில் வல்லுனர்கள் போன்றோரைப் பாராட்டுதலும், பொருள் வழங்குதலும் ஊக்குவிப்பதும் ஆகிய சிவப்பணியினை மறுமலர்ச்சிக்கான பணிகளைச் செம்மையாகச் செய்து வருகிறார்கள். வணிக வரித்துறையில் செம்மையாக பணியாற்றி ஓய்வு பெற்ற, திருக்குறள், திருமுறைகள், சைவ சித்தாந்தம், சோதிடம் முதலிய துறைகளில் சிறந்த, சம்பத்தன் அடியான், மெஞ்ஞான வள்ளல்

---

*பன்னிரு திருமுறைகளுக்குத் திருமுறை நாதர் என்பது திருப்பெயராகும்.*






தெய்வச் சேக்கிழார் பெரிய புராணவிழா
கனடா இந்து சமயப் பேரவையினர்
சிவபூஜைகள், விடைக் கொடி ஏற்றல், மங்கல இசையரங்கம், தேவாரப்பண்ணரங்கம்,
யானை மீது பன்னிரு திருமுறை திருவீதியுலா, திருமந்திரம் நூல் வெளியீடு, அபிஷேக ஆராதனை,
பன்னிரு திருமுறை பாராயணம் செய்தோருக்கு பாராட்டு, சிறப்பு சொற்பொழிவு முதலியன
இடம் :
ஆயிரங்கால் மண்டபம்,
சிதம்பரம்
நாள் :
8, 9.12.2007
கலந்துகொள்வோர்
ஆதீனகுருமார்கள், மடாதிபதிகள், சைவப்பெரும்புலவர்கள், சைவ மன்றங்கள் மற்றும் சிவனடியார்கள்
வருக! வருக!! வருக!!!
இந்து சமயப் பேரவைச் செயலர்
சிவ. முத்துலிங்கம்
கனடா

என்றெல்லாம் பாராட்டுப் பெற்ற சிவத்திரு, கு. வைத்தியநாதன் அவர்களை ‘சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம்’ இயக்குநராக நியமித்து கடந்த பதினாறு ஆண்டுகளாக பயிற்சியளிக்கிறார்கள். தமிழ் பேசும் அன்பர்கள் பதினெட்டாயிரம் பேர் இப்பயிற்சியில் பயின்று, தேர்ச்சி பெற்று சித்தாந்த இரத்தினம் என்னும் பட்டத்தினையும் பெற்று வாழ்வில் மேன்மையுற்று வாழ்கிறார்கள்.

தமிழக மக்களிடையே பல சைவ ஆதீனங்களும் தொண்டு நிறுவனங்களும். திருமுறை பாராட்டும் அமைப்புகளும் பரப்பும் சைவ சமயக்கொள்கைகளும். உயிர் பலி எதிர்ப்பும் ஓரளவே வெற்றி பெற்றுள்ளது. சிறு தெய்வ வழிபாடுகள் துன்பங்கள் நீங்கக் கோள்களுக்கு பரிகாரப் பூசனைகள் செய்தல் முதலியன தொடர்கின்றன.

‘திருமுறைகளை தொடர்ந்து ஓதி வழிபடுவோம் - துன்பம் நீக்குவோம் - இன்பம் பெறுவோம்’ என்ற கொள்கை மேலும் வலுப்பெற வேண்டியுள்ளது.

சைவ சமயத்தின் தலையாய கொள்கையான ‘திருமுறைகளை ஓதவேண்டும்’ என்பதை தமிழக மக்களுக்கு உணர்த்தும் படியாக கடந்த 15-11-07 முதல் 9-12-07 வரை நிகழ்வுகள் தமிழகத்தில் நடைபெற்றன.

கனடா நாட்டிலிருந்து ஒன்ராறியோ இந்து சமயப் பேரவைச் செயலர், பொருளாளர், மற்றும் பல அன்பர்கள் தமிழகம் வந்து. சீர்காழி, திருவதிகைவீரட்டானம், திருவெண்ணெய்நல்லூர், திருப்பெருந்துறை, திருஉத்தரகோசமங்கை, திருவையாறு, திருவாவடுதுறை, திருவீழிமிழலை, திருஆலவாய் மற்றும் பல திருத்தலக் கோவில்களிலும் பதினொரு திருமுறைகளையும் முற்றோதல் செய்து, பன்னிரண்டாம் திருமுறையான பெரிய புராணமென்னும் திருத்தொண்டர் புராணத்தை தில்லையம்பலவன் திருக்கோயில் ஆயிரங்கால் மண்டபத்தில் முற்றோதல் நிறைவு செய்து விழா எடுத்தனர்.

முதல் திருமுறையாம் சம்பந்தர் தேவாரம் முதல் பகுதியை. சம்பந்தர் அவதாரத் தலமாம் சீர்காழியில் பிரமபுரீசர் - திருநிலைநாயகி கோயில் வளாகத்தில் திருஞானசம்பந்தர் திருக்கோவில் சன்னதியில் துவக்கம் செய்தனர். அடியேன் எனது மகனுடன் சென்று கலந்து கொள்ள திருவருள் கூட்டியது. சிதம்பரம் - தில்லைத் திருமுறைக் கழகத் தலைவர், புலவர் சிவத்திரு ச.

---

*தற்பெருமை உள்ள இடத்தில் பெருந்தன்மை இருக்காது*

சுந்தரேசம்பிள்ளை தலைமையில், சில அறிஞர்களின் சிறப்புரைக்குப்பின் திருமுறை ஓதல் துவங்கியது. கனடியச் சிவனடியார்களில் பெண்டிரே அதிகம் வந்தனர். சீருடையணிந்து தங்கள் ஒற்றுமையையும் சீரிய நோக்கத்தினையும் உணர்த்தினர்.

திருமுறைப் பாடல்களை மிக்க விருப்புடனும் சிவன் மேல் அன்பான பக்தியுடனும், ஓசை நயத்துடனும், பொருள் விளங்குமாறு சந்தி பிரித்தும் ஓதினார்கள். கேட்டுக் கொண்டிருந்த ஊர்மக்கள் சிலரே ஆயினும் கேட்டலினால் துன்பம் துடைக்கப் பெற்றார்கள். ஓதுவதைப் பாராட்டினார்கள். ஓதிய அடியார்கள் உணவு, தேநீர், நீர் முதலிய உட்கொள் பொருட்களின் மணம். குணம். சுவையினில் விருப்பும் - வெறுப்பும் பாராட்டாது - சத்திநிபாதம் பெற்ற ஞானிகளாக விளங்கினர் என்றால் மிகையாகாது,

மாலையில் அவர்களுடனே சுவாமிமலை சென்று அன்று கந்தசட்டி நாளானதால் சுவாமி நாத தரிசனமும். சூரசம்கார விழாவும் கண்டு மகிழ்வுடன் சென்னைக்குத் திரும்பினோம் அவர்கள் சிதம்பரம் ஊர் சென்றனர்,

அவர்கள் தமிழகத்தின் பல திருக்கோவில்களில் - திருமுறைகள் முற்றோதுதலை தொடர்ந்து நடத்தி, நிறைவாக பன்னிரண்டாம் திருமுறை முற்றோதுதலை தில்லையில் ஆயிரங்கால் மண்டபத்தில் துவக்கினார்கள்,

முற்பிறவிச் சிவபுண்ணியப் பலனாக. 7-12-2007 அன்று அவர்கள் பெரியபுராணத்தை மூன்றாவது நாளாக ஓதும்போது அடியேன் துணைவியாருடன் கலந்துகொள்ளும் வாய்ப்பு கிட்டியது. அவர்கள் அதிகாலையிலேயே. உணவு - தேநீர் ஏதும் உட்கொள்ளாமலேயே திருமுறை ஓதுதலை துவங்கிவிட்டார்கள். காலை உணவும் தேநீரும் உட்கொண்டு சென்ற எங்களுக்கு நாணமாக இருந்தது. அவர்களது அன்பு எங்களை ஆட்கொண்டது. மாலை எட்டு மணியளவில் முற்றோதுதல் நிறைவடைந்தது.

- தொடரும்

---

continued from page 45

her ill temper to him. Lord Siva walked down the streets of Thiruvaaroor to Paravaiyaar's house. This time Paravaiyaar was in good mood, and was willing to accede to the proposal of Lord Siva. Thus Sundarar and Paravaiyaar were happily reunited by this mediation.

- To be continued

# ST. SUNDARAMOORTHY NAYANAR

## Sulks of Paravaiyar

SEENIAPPAH RAJARATNAM

After Nambi had departed from Paravaiyar, she became weary day by day in loneliness. The persons she sent back to Sundarar came back with the news that Sundarar of perfect conduct, publicly marrying Sangiliyar on his arrival at Otriyoor.Paravaiyar was fuming with a broken heart. Sundarar came back from Ortiyoor. When he neared the temple of Lord Siva, his retinue went to Paravaiyaar's mansion. To their utter surprise they were barred from entering the house. Sundarar sent a special messenger to pacify her. Paravaiyar threatened to end her life if any one spoke any more about this matter.

Sundarar wanted Lord Siva who owns him to go and get rid of the sulks of Paravaiyaar. Lord Siva was prepared to go to Paravaiyaar as mediator that very moment. Sundarar fell at the feet of the Lord.The mediator sent by the pearless devotee walked down the street and Vanthonder was trailing him. Lord Siva took the form of an orthodox Vedic Brahmin and arrived at the mansion all by himself. Paravaiyaar not knowing the transcent being, became deeply agitated and opened the door. She saluted him and asked what when every one was asleep. The Lord said Nambi should be allowed to come here. The Lady with the lovely forehead and beautiful eyes retorted that went to Otriyoor, where he had relationship with Sangili and requsted Lord Siva go away. The Lord went away crest fallen. Sundarar seeing the Lord come back concluded that he had successfully completed the mission came to meet him with a smile. The Lord answered, on your reqest we went to the house of Paravaiyaar, and even when we entreated her , she spoke harsh words, and refused to see you.Sunderar turned to the Lord and said “you have made us understand that we are not worthy to be your slaves. You ate the poison of the stormy sea; you flew into rage with the Lord of death and befriended the lad. You have witnessed my grief, and my breakdown. If today you do not effect my reunion with her, my life will depart”. Saying this Sundarar fell at the feet of the Lord. Lord Siva unable to bear the grief of Sundarar promised to go back to Paravaiyaar and persuade her. Now Paravaiyaar cooled down came to think that it was the Lord Siva who came to mediate and regretted

sea page 44

# ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

### திருமுறைச் செல்வர் சிவ. முத்துலிங்கம்

- இறைவனோடு உள்ளம் பொருந்தி இருப்பது ஒன்றே உண்மையான இன்பம். அந்த இன்பத்தோடு பொருந்தியதே உண்மை வாழ்வு. அதுவே இன்ப வாழ்வாகும்.

- ஒருவன் உயர் நல வாழ்க்கையையும் நலத்தையும் கருதுதல் வேண்டும்.

- எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்துவதே மக்கள் வாழ்க்கையின் சிறப்பாகும்.

- நாம் எல்லோரும் இறைவனுக்குக் கடன்காரர்கள். நாம் சுவாசிக்கும் காற்று, குடிக்கும் தண்ணீர், உண்ணும் உணவு, வாழும் இந்தப் பிரபஞ்சம் யாவும் இறைவன் நமக்கு பிரதி பலன் பாராமல் அளித்தவையேயாகும்.

- தவறாது காலையும் மாலையும் இடைவிடாது இறைவனை வழிபட்டு எங்கள் கடனைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

- ஒருவனுக்கு உண்மை உயர்வு என்பது தனக்குத் துன்பம் விளைவிப்போருக்கு நன்மை செய்தலாகும்.

- நமது அறிவிற் சிறந்த சான்றோர்களும் ஞானிகளும் கூறிய கருத்துக்களை எழுத்துத் தவறாது, சொல் தவறாது, வரி தவறாது கூறக் கூடிய பெருமக்கள் பலர் எமது சமூகத்தில் உள்ளார்கள். ஆனால் அவர்கள் சொன்னவாறு செய்வதற்குத்தான் ஆட்கள் இல்லை.

- எல்லாம் வல்ல இறைவன் தாயினும் மிகுந்த பரிவோடு தன்னைப் பாதுகாப்பதை உணரும் மனிதன் எல்லார்க்கும் அன்பு செய்வதையே சிறந்த பணியாகக் கொள்வான்.

---

*பெருந்தன்மை உள்ள இடத்தில் தற்பெருமை இருக்காது*

- எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்திய பெரியார்களை பின்பற்றி நடப்பதால் அன்பு செலுத்துதல் எளிதாகும். கடவுள் எல்லாக் குற்றங்களையும் பொறுத்தருள்வதுபோல நாமும் பொறுமையுடன் பிறர் குற்றங்களை மன்னிப்பதே நன்று.

- நம் வாழ்க்கையில் நாம் அறிவு தெளிவாய் இருக்கும்போது பிறர்க்கு அன்பு, செய்வதன் சிறப்பு நமக்கு இனிதே விளங்கும்.

- அன்பு நெறியில் நாம் நடக்கத் தொடங்கிவிட்ட பின்னர் வாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு அனுபவமும் நம் ஆன்மவளர்ச்சிக்கு அவசியமானதாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும்.

- நாம் விதியை வெல்ல வேண்டுமாயின் நம்மனநிலையை மாற்ற வேண்டும்.

- நாம் இறைவனின் அருள் நாடி அன்பு நிலையிற் செல்லச் செல்ல உள்ளத்தில் உயர்ந்த மாற்றம் அடைவோம்.

- அன்பு நெறியிற் செல்வதற்கு மிகுந்த கல்வியாவது மிகுந்த திறமையாவது வேண்டுவதில்லை. திருவருள் நாட்டம் ஒன்றே போதுமானது.

- நமது நினைவே நமதுசெயலுக்கு காரணம். செயல் பயனுக்கு காரணம். எனவே நம்முடைய நினைவுகளை உயர்ந்த வழியில் செலுத்த வேண்டும்.

- அன்பர்களுக்குப் பணி செய்வதால் அன்பு நமக்கு எளிதில் கைவரும்.

- அன்பு மயமாக எண்ணத்திலும் விருப்பத்திலும், நோக்கத்திலும், சொல்லிலும், செயலிலும் நாம் ஆகிவிடுவோமானால் நாம் உலகத் துன்பத்தினின்றும் விடுதலையுற்று உள்ளம் இன்பத்தை நுகரும் பெருவாழ்வு பெறுவோம்.

---

*உண்மையான தெய்வ பக்தி உள்ளவனிடம் உயர்ந்த சிந்தனைகளே தோன்றும்.*

# THE CHILDREN'S EDUCATION TRUST OF CANADA


## குழந்தைகளின் கல்விக்கான நம்பிக்கை நிதியம் - கனடா

**OFFERED TO THE PUBLIC BY**
**CHILDREN'S EDUCATION FUNDS INC.**
**A VERY DIFFERENT R.E.S.P**

அரசாங்கத்தின் இலவச 20% நன்கொடையும் வழங்கப்படும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற புலமைப்பரிசில் சேமிப்புத் திட்டம். இருவருட டிப்ளோமா பத்திரப் படிப்பைப் பூர்த்தி செய்து எல்லாப் புலமைப் பரிசில்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

FOR MORE INFORMATION PLEASE CONTACT

**Siva Kanapathypillai**



சிறந்த சேவையையும், ஆலோசனைகளையும் பெற தொடர்பு கொள்ளுங்கள்:

சிவா கணபதிப்பிள்ளை

Bus: 416 -438 -0660 / 416-438-3578
Res: 905 -472-1139 Call: 416-899-6044
FAX: 416 -438 -8532

2100 Ellesmere Road, Suite#307, Scarborough, Ontario M1H 3B7

# APPLEMORE

# AUTOMOTIVE INC.

## வாகனப்புகை வெளியேற்றப் பரிசோதனை

ONTARIO'S DRIVE CLEAN
For the air we breathe

## Ontario Emission Inspection



ஒன்ராறியோ அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வாகனப்பரிசோதனை நிலையம்


குறைந்த விலையில், குறைந்த காலத்தில் குறையில்லாது உங்கள் வாகனத் திருத்த வேலைகளை செய்து கொள்ள வாருங்கள்

**TEL: (416) 285-4998**

**435 MIDWEST ROAD, UNIT # 1A & 5B**
**SCARBOROUGH, ONT.**

# முருகன் புத்தகசாலை

## உங்களை வரவேற்கிறது



இலங்கை, இந்தியாவில் இருந்து
நேரடியாக புத்தகங்கள், பத்திரிகைகளை
இறக்குமதி செய்து விற்பனை செய்கிறோம்.

அதிவேக துரித பணமாற்றுச் சேவை

**WESTERN UNION**
**MONEY TRANSFER**


**1241A, ELLESMERE ROAD, SCARBOROUGH,**
**ONTARIO, M1P 2X8, CANADA.**
**TEL : (416) 285-9118**

# விவேகா அச்சகம்

**VIVEKA** *Printers*

பலவர்ண அச்சு வேலைகளை
மிகக்குறைந்த
விலையில் தரமாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

**Book Publishing, Printing, Binding**
**Graphic Designs, Web Designs, Digital Colour Copies,**
**Digital Black & White Copies**




**80 Barbados Blvd., Unit 4**
**Scarborough, ON**
**Tel : (416) 410-6401**